# குமரகுருபரன்



மலர் 13]  சுபகிருது-ஸு ஐப்பசி-மீ 1ம்-உ (17-10-62)  [இதழ்

# ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்,
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை – 6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

## உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபரன்



மலர் 13 | சுபகிருது-௵ ஐப்பசித் திங்கள் 1-ம்வ [17-10-62] | இதழ் 10

# சிதம்பரச் செய்யுட் கோவை

## ஸ்ரீமத். சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

[முன்னைய முதுபெரும் புலவர்
உயர்திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்]

[ கட்டுரை 61 ]

சிவபரம் பொருள் செய்தருளுந் திருக்கூத்துக் காரணம் அளவுபடாமையின் ஆராலும் அளவிடற்கரிதே ஆயினும், அருள் பெற்ற பெரியோர்க்கு அநாதியே அவன் அக்காரணத்தை அவர்தம் உள்ளிருந்து உணர்த்தியுதவினுன், அவ்வுதவியால் அறிந்த நம் சான்ருேர் எல்லாரும் 'ஐந்தொழிற் கூத்து' என்று அத்தனைப் பொருட்பன்மையையும் அடக்கி மிகச்சுருக்கம் உறக் கொண்டுரைத்தனர். உரைத்தலால், அத்திருக்கூத்தின் காரணம் உயிர்கட்கு ஐந்தொழில்கள் நிகழ்வதே ஆம் என்பது உறுதியாயிற்று.

படைத்தற் கூத்தும், காத்தற்கூத்தும், அழித்தற்கூத்தும், மறைத்தற்கூத்தும், அருளற்கூத்தும் அப்பெரும்பொருள்

இயற்ருவிடின், படைப்பு முதலிய ஐந்தொழிலும் நிகழுமோ? அவை நிகழாவிடின், உயிர்கட்கு மும்மலம் அகலுமோ ? அகலா தேல் செம்மலர் நோன்ருள் சேருமோ? 'செம்மலர் நோன் ருள் சேரல் ஒட்டா அம்மலங்கழிஇ' இறவாத இன்ப அன்புற்று அறவாழியந்தணன் தாள்நிழற்கீழ் அகலாது வாழும் முடிந்த பேற்றை எய்திஞல் அன்றிப் பிறவாத பெருநலம் நாம் பெறல் உண்டோ?

படைப்பு - தோற்றம். காப்பு - நிலே. அழிப்பு - இறுதி, மறைப்பு-திரோபவம், வைந்தவம் எனப்படும். அருள்-அநுக் கிரகம்.

தோற்றம், நிலே, இறுதி, மறைப்பு, அருள் என்னும் ஐந்தொழிலும் (ஸ்தூலம் சூக்ஷ்மம் அதிசூக்ஷ்மம்) (1) பருமை, (2) நுண்மை, (3) மிகு நுண்மை என்று மூவகைப்படும்.

உலகத்தின் தோற்றமும் இறுதியும் (ஒடுக்கமும்) பருமை. தோன்றிய உலகம் ஒடுக்கம் வரும் அளவும் நிலேபெறுவதே நிலே எனப்படும். இம்முத்தொழிலும் சடப்பொருட்கே உரிய.

மறைப்பும் அருளும் சித்துப்பொருட்கே சிறப்பான தொழில்.

தடை

தோற்றம் முதலிய தொழில்களேப்போல நிலேயாகிய காத்தற்ருெழிலும் கடவுள் செயலாவது எப்படி?

(1) தோன்றிய உலகம் அழியும் அளவும் தானே நிலே பெறும். அந்நிலேபெறுந் தொழிற்கு ஒரு முதல்வன் வேண்டா.

(2) அரசன் தொழில், தன்னுட்டைப் பகைவர் அழிக்காமல் போற்றிநிலே பெறுத்துதல். அதுபோல உலகை அழிப்பார் வேறு உளரேல் அவரைத் தடுத்து உலகத்தை நிலேபெறுத்துதல் முதல்வனுக்கு வேண்டும். முதல்வனின் வேறு ஆக அழிப்பவர் எவரும் இலர். அம்முதல்வன், தான் படைத்த உலகைத் தான் அழிக்கும் அளவும் நிலேபெறும். அந்நிலேபேறு உலகினுடை யதே. கடவுள் தொழில் அன்று. வேறு அழிப்பார் எவரும் இல்லாமையால், நிலேபெறுத்தும் முயற்சி கடவுட்கு இல்லே. அதனுல், உலகின் தொழிலே நிலே.

## அதற்கு மறுப்பு

(1) ஒரு காலத்தில் ஒருங்கு தோன்றிய பொருள் இரண்டுள் ஒன்று நெடுங்காலம் நிற்கின்றது. ஒன்று சிறிது காலம் நிற்கின்றது. இந்நிலைவேறுபாடு இருப்பது யாவரும் அறிவதே. இந்நிலை வேறுபாடு, வினை வேறுபாட்டால் உண்டாகின்றது. உலகின் நிலையிலும் உயிர்களின் (கட்டுட்பட்ட) நிலையிலும் சிறிதும் பெரிதும் ஆகிய (கால) வேறுபாடு உளது.

(2) சேதனப்ரபஞ்சம் அசேதனப்ரபஞ்சம் இரண்டிற்கும் காலம் பற்றிச் சிறுமை பெருமையாம் நிலைவேறுபாடு உண்டு. அவற்றுள் சேதனப்ரபஞ்சம் (உயிர்கள்) தத்தம் வினை (கர்மபேதம்) வேறுபாட்டால்தான், நெடுங்காலம் நிற்றலும் சிறிது காலம் நிற்றலும் ஆகிய நிலைவேறுபாட்டை எய்து கின்றது.

(3) அக்கருமபேதம் (வினைவேறுபாடு) முதல்வன் ஆணை யால் அன்றி வாராது. அதனால், நிலைத்தொழிலும் கடவுளாற் செய்யப்படும் திருக்கூத்தே.

(4) தண்ணீர்க்கும் தாங்குவோனது தலைமேல் நிலைபெறு தலும் அதனைத் தாங்கும் அவனது முயற்சி இன்றி அமையாது. அது போலத், தோன்றிய உலகம் ஒடுங்கும் அளவும் நிலைபெறு தலும் கடவுளது முயற்சியின்றி அமையாது. அம்முயற்சியாவது "தோன்றிய உலகம் ஒடுக்கம் வரும் அளவும் நிலைபெறுக" என்னும் ஆணையாகிய நினைவே (சங்கற்பமே).

சிவஞானபோதத்தில் இரண்டாவது சூத்திரத்தில், 'ஆணை யின் இருவினையின்' என்று உபதேசித்தருளியதன் உண்மை, இச்சங்கற்பஸ்திதியை உணர்த்தி நின்றதாகும். அந்த ஆணை யின் நீக்கம் இன்றிநிற்கும் கடவுள் செயலே நிலையும் பிறவும் ஆகும்.

மறைப்பும் அவனது சங்கற்பமே அன்றிப் பிறிதில்லை. அகங்கையில் ஏந்திய நெருப்பின் சூட்டைக் குளிகை தடுத்து நிற்கும். அக்குளிகைக்கு மாறுகிய மந்திரம் உச்சரிக்கும் அளவும் அச்சூட்டை நிகழ வொட்டாமல் தடுக்கும் ஆற்றல்

அதற்கு உண்டு. அதுபோல, அம்முதல்வனைச் சிறப்பியல்பால் உணர்கின்ற மெய்யுணர்வு தோன்றும் அளவும் அவனது பெருங்கருணை உயிர்களிடத்தில் ஒருங்கே நிகழாமல் உயிர்க் குற்றம் ஆகிய அவ்வம் மலசக்தி தடுத்து நிற்கும்.

அம்மல சக்தியின் வழிநின்று அவற்றை நடாத்துவதாகிய கடவுளது சங்கற்பமே அம்மறைப்புத் தொழில். வேறு இல்லை. இதைக் குறித்தே நம் நாயனுர் நாவரசர், 'அந்தமும் ஆதியும் ஆகிநின்றிர்' எனத் தொடங்கும் திருவிருத்தத்தில், 'அண்டம் எண்டிசைக்கும் பந்தமும் வீடும் பரப்புகின்றீர்' என்று கூறியருளினுர். இதில் பந்தம் என்றது மறைப்பை. வீடு என்றது அருளை. இவ்விரண்டு தொழில்களும் உயிர்க்கே உரியன. சடப்பொருட்குப் பந்தமும் இல்லை. அதன் நிவர்த்தியும் (வீடும்) இல்லை.

இவ்வுண்மையை உணர்ந்தால் ஒருவினு எழாது. அது என்ன வினு?

கடவுள் முற்றுணர்வும் முடிவிலாற்றலும் குறைவிலாத அருளும் உடையவனுக இருந்தும் பலவேறு வகைப்பட்ட துன்பங்களை யெல்லாம் உண்டாக்கும் வினைவலி (கர்மசக்தி)யையும் எல்லாப் பெருங்கொடுமைகளுக்கும் மூலம் ஆகிய சகசமலத்தின் சக்தியையும் அவற்ருல் வரும் துன்பங்களையும் கெடுத்து, உயிர்களெல்லா வற்றையும் ஒருசேர வீடுபெறச் செய்யாதது ஏன்? இவ்வினு எழுமோ அவ்வுணர்வு இருந்தால்?

1) முற்றுணர்வினன் ஆதலின், உலகத்து உயிர்கள்படும் துன்பம் முழுவதும் உணர்ந்தோன் ஆவன்.

2) முடிவிலாற்றல் உடையவன் ஆதலின், உயிர்களெல்லா வற்றையும் ஒருசேர விடுபெறச் செய்யவல்லன் ஆவன்.

3) முடிவு இல்லாத பெருங்கருணையுடையவன் ஆதலின், சிவன், சங்கரன் என்னும் திருநாமங்களைப் பெற்ருன். வேண்டுதல் வேண்டாமையில்லான் ஆகி எல்லாவுயிர்களிடத்தும் ஒப்ப நிகழும் கருணுமூர்த்தியை உடையவன், கருணைமூர்த்தி, சிவன் கருணு மூர்த்திமான். மூர்த்திமானை மூர்த்தி எனல் தப்பு

வழக்கு. (சுந்தரமூர்த்தி, ராமமூர்த்தி முதலிய வழக்கு இலக்கண வழக்கல்ல). மூர்த்திவேறு. அம்மூர்த்தியை உடைய மூர்த்தி மான்வேறு.

பிறர்துன்பம் கண்டால் (தொடர்பு பற்றுது) அதனை அப்பொழுதே நீக்குதற்குத் தோன்றும் மனத்தெழுச்சியே பெருங் கருணை. அக்கருணையால் எல்லாவுயிர்கட்கும் ஒருங்கே வீடு பேறு அடைவித்தலில் மிக்க ஒருப்பாடு உடையவன் இறைவன்.

இத்தன்மைகள் எல்லாம் உடைய இறைவன் அநாதிமுதல் உயிர்களால் தேடிச்சேர்க்கப்பட்டனவும் பலவேறு வகைப் பட்டனவும் ஆன வினைவலியையும் அவ்வினைவலியால் வருந் துன்பங்களையும் கெடுத்து உயிர்களைத் தன் அடிநிழலில் வாழ வைக்கலாம் அல்லவா? ஏன் அதுசெய்திலன்? அம்மலசக்தியின் வழிநின்று அச்சக்தியை நடாத்தும் சங்கற்பமாகிய மறைத்தற் கூத்தே காரணம்.

"பார்த்திடின் அருளே எல்லாம்" என்ற (சிவஞான சித்தி யாகிய) ஆகமத்தின் வசனம் இங்கு எண்ணற்பாலது.

இதுவரையில் எழுதியவற்றை உளங்கொண்டு சிதம்பரச் செய்யுட் கோவையின் (67 ஆம்) பாடலை நோக்குங்கள். அதில் எத்தனை நோக்கம் உண்டு?

ஒருநோக்கம் பகல்செய்ய வொருநோக்க மிருள்செய்ய
இருநோக்கிற் றெழில்செய்துந் துயில்செய்து மிளைத்துயிர்கள்
கருநோக்கா வகைகருணைக் கண்ணேக்கஞ் செயுஞானத்
திருநோக்க வருணேக்க மிருநோக்குஞ் செயச்செய்து
மருநோக்கும் பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

இத்தரவு எச்சந்தையிலும் நட்டப்படச்செய்யாது. தில்லை நட்டப்பரமன் திருக்கூத்துண்மையை விளக்குகின்றது.

[தரகு தரவு என்னும் பெயர் வழக்கு 'லஞ்சம்' தான். ஆனல் வெளிப்படையாக நிகழ்வது. தருகு என்றும் தருபு என்றும் இருந்து தரகு தரவு என மருவி வழங்குகின்றது. உருபு-உருவு;

பரிபு-பரிவு. வருபு-வரவு. செல்பு-செல்வு, செலவு. உழுபு-உழுவு, உழவு. உறுபு - உறுவு, உறவு. முதலிய பல உள.]

பகல் செய்யும் நோக்கம் வலக்கண் (கதிரோன்), இரவு செய்வது இடக்கண் (திங்கள்) தொழில் செய்திளைப்பது பகலில். இளைப்பாறத் துயில்வது இரவிருளில். உயிர்கள் அக்கடவுளின் இருகண்ணோக்காலும் முறையே தொழில்புரிவதும் துயில் உறுவதும் செய்கின்றன. அவ்வுயிர்ச் செயலுக்குக் காரணம் இரு நோக்கும் செய்யும் செயல். அவற்றை அவ்விருநோக்கும் செய்தற்குக் காரணம் அருள் நோக்கமே. அருள் நோக்கம் அக்கண்ணோக்கத்தால். அத்தொழிலுறக்கங்களைச் செய்விப் பதற்குக் காரணம் ஞானத்திருவாகிய சிவகாமியம்மையார் திருக்கூத்தை நோக்கியிருத்தலேயாகும். அப்பரம கருணாநிதி யாகிய தாயின் கருணைக் கண்ணோக்கம் செய்யாவிட்டால் ஐந் தொழில்கள் நிகழா. நிகழாவேல் உயிர்கள் கேவலாவத்தையைத் தவிர வேறு அவத்தையை எய்தாவாம். கருநோக்கியவை முத்தித்திருவை நோக்கா. முத்தித்திருவைப் பெறத்தகுதி யில்லாத உயிர்கள் கருவை நோக்கவும் மாட்டா. எல்லாவற்றிற் கும் அம்மையின் அருள் நோக்கம் அத்யாவசியம்.

இத்தரவில் (பாட்டில் பகல் செய்யத் தொழில் செய்தும், இருள் செய்யத் துயில் செய்தும் உயிர்கள் இளைத்து, (அவை மீண்டும்) கருநோக்கா வகை (யில்) கருணைக் கண்ணோக்கம் செய்யும் ஞானத்திரு (ஆகிய அம்பிகை) நோக்க, (அதனால்) (முதல்வன்) அருள்நோக்கம் அந்த இரண்டுநோக்கமும் செய் கின்றன. அவை செய்யச் செய்து நடம் செய்பவன் இறைவன் என்னும் ஐந்தொழிற்கூத்தைக் குறிப்பாகக் கூறியது காண்க.

முடிபு: செய்யச் செய்தும் செய்யச் செய்தும் இளைத்து உயிர்கள் (கருவை) நோக்காவகை நோக்கம் செய்யும் திரு எனவும் திருநோக்க அருள்நோக்கம் (அவ் இரு நோக்கும்) செயச்செய்து நடஞ்செய்வோய் எனவும் இயைக்க.

(தொடரும்)

உ

சிவ சிவ

# திருவெண்ணெய்நல்லூரில்

## தேவார நிதி சேமவைப்பு ரூ. 30,000/-

உமா தேவியார் பசுவெண்ணெயாலே கோட்டையை அமைத்து அதனிடையில் தவவேள்வி செய்து அருள்பெற்ற தலமாதலின் திருவெண்ணெய் நல்லூர் எனப்பெற்றதும், திருவருட்டுறை என்று ஆலயம் பெயர் பெற்றுள்ளதும், 'பெண்ணை அருட்டுறை' என்று க்ஷேத்திரக் கோவையில் திருநாவுக்கரசரால் குறிக்கப்பெற்றதும், அற்புதப் பழ ஆவணம் காட்டிச் சுந்தரர் தடுத்தாட்கொள்ளப் பெற்ற தலமாயதும், 'பித்தா பிறைசூட எனும் பெரிதாம் திருப்பதிகம் இத்தாரணி முதலாவுல கெல்லாம் உய'ச் சுந்தரரால் பாடப்பெற்ற சீருடையதும், சைவசமய சந்தான குரவருள் முதலாமவராகிய மெய் கண்ட தேவர் (ஆகிய சுவேதவனப்பெருமாள்) திருக்கையிலையினின்று ஆகாயவழியே சென்ற பரஞ்சோதி மாமுனிவரிடம் உபதேசம் பெற்ற தலமாயதும், தென்பெண்ணையாற்றில் தென்பால் அமைந்துள்ளதுமான திருவெண்ணெய்நல்லூர் எனும் திருத்தலத்தில் திருவருட்டுறை என்று வழங்கப்பெறும் தடுத்தாட்கொண்டருளிய தேவராகிய கிருபாபுரீசுவரர் திருக்கோயில் தேவாரத் திருமுறைகளை நாடோறும் விண்ணப்பம் செய்வித்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப் பெற்றது. இது 'திருவெண்ணெய்நல்லூரில் தேவார நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ 30,000/- (ரூபா முப்பதாயிரம்) இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப்பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரங்கள் எண். சி. ஏ. 229888 ரூ. 10,000/-, சிஏ. 181882- ரூ. 5000/-, சிஏ. 237051- ரூ. 5000/-, சிஏ. 237378- ரூ. 2000/-, சிஏ. 237645- ரூ. 2000/-,

சிஏ. 235178- ரூ. 1000/-, சிஏ.237744- ரூ 1000/-, சிஏ. 227643- ரூ. 800/-, சிஏ. 215979- ரூ. 700/-, சிஏ. 227627- ரூ. 500/-, சிஏ. 227628- ரூ. 500/, சிஏ. 227635- ரூ. 500/-. சிஏ. 227636- ரூ. 500/-, சிஏ. 237751- ரூ. 500/- ஆக ரூ.30,000/- இந்நிதி நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப் பெற்று வரும்.

3. (அ) இச்சேமவைப்பினின்று கிடைக்கும் வட்டித் தொகை, திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறை என்று அழைக்கப்பெறும் தடுத்தாட்கொண்ட நாதராகிய கிருபாபுரீசர் திருக்கோயிலில் நாடோறும் தேவாரத் திருமுறை விண்ணப்பம் செய்ய நம்மால் நியமிக்கப்பெறும் ஓதுவார்க்கு ஊதியம் அளிக்கப் பயன்படுத்தப்பெறும்.

(ஆ) நம்மால் நியமிக்கப்பெறும் ஓதுவார் நாடோறும் காலையிலும், மாலையிலும், 6 மணி முதல் 7 மணி வரையிலும் திருவெண்ணெய்நல்லூர்த் திருவருட்டுறைத் திருக்கோயிலில் தேவாரத் திருமுறைகளை ஓதுதல் வேண்டும்.

(இ) ஷ ஓதுவார் தேவாரம் ஓதும் பணியைச் செவ்வனே புரிந்தால் மாதம் ஒன்றுக்கு ரூ. 60/- (ரூபா அறுபது) வீதம் சம்பளம் அளிக்கப்பெற்றும் வட்டி வரவுக்கு ஏற்ப இவ்வூதியம் குறைக்கவும் கூட்டவும் பெறும்.

(ஈ) திருப்பதியம் விண்ணப்பிக்கும் ஓதுவாரை நியமிக்கவும் நீக்கவும் நமக்கும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களுக்குமே உரிமையுண்டு.

(உ) தேவார ஓதுவார் தாம் நாடோறும் பணி செய்தமைக்குத் திருவெண்ணெய்நல்லூர்த் திருவருட்டுறைக்கோயில் இறை பணியாளர் அல்லது மானேஜிங் டிரஸ்டியிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்று மாதந்தோறும் நமக்கு அனுப்பிக்கொள்ள வேண்டும். அத்தாட்சிப்பத்திரம் வந்ததும் எத்தனை நாட்கள் பணி செய்ததாக அத்தாட்சி வருகிறதோ அத்தனை நாட்களுக்குரிய சம்பளத் தொகை ஓதுவார் பேருக்கே அனுப்பப்பெறும்.

(ஊ) நம்மால் நியமிக்கப்பெற்ற ஓதுவார் பணிசெய்யாத நாட்களில் தகுதியுடைய வேறு ஓதுவாரைக் கொண்டு தேவாரத்தை விண்ணப்பிக்கச் செய்யலாம். இவ்வோதுவார் தாம் பணியாற்றிய நாளுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு ரூ. 1–50 (ரூபா ஒன்றரை) வீதம் ஊதியம் பெறக்கடவர்.

4. தேவார ஓதுவார்க்குச் சம்பளம் அளித்த பிறகு தொகை எஞ்சியிருப்பின் அவ்வெஞ்சிய தொகை சேமிக்கப்பட்டுப் பிறகு ஷி பணிபுரியும் ஓதுவாருடைய தகுதி சீலம் பணி செய்யும் திறமை முதலியவற்றை நோக்கி நம் விருப்பம் போல் ஊதியத்தை அதிகப்படுத்தப் பயன்படுத்தப் பெறும்.

5. இச்சேமவைப்பு வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற்பொருள் திரும்பியளிக்கப் பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப்பெறும்.

Tirupanandal<br>Dated 8-9-1962. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

---

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office on 22-9-1962 as number 33 of 1962 of Book 4 volume 50 pages 70 to 74.

உ

சிவ சிவ

# மதுரை-காஞ்சி சிவாச்சாரிய பட்டர்கள் காசி யாத்திரை நிதி சேமவைப்பு ரூ. 10,000/-

'சிவராஜதானியாய்ச் சிவன் முத்தித் தலமுமாய்த் துவாத சாந்தத் தலமும் ஆனதித்தலம்' என்றும். 'மும்மைத் தமிழ்ச் செழியன்' வெப்பொடு கொடுங்கூனும் மோசித்த வித்தலம்' என்றும், 'மேதகைய பலகலைபோர்த் தறம்வளரும் தமிழ்க்' கூடல் என்றும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் புகழ்ந்து பாடிய தலமாகிய மதுரையிலும்.

'கண்ணகன் ஞாலத்து எண்ணில்பல் கோடிப்
பிள்ளைகள் பெற்ற பெருமணைக் கிழத்திக்கு
நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங்கு
இருநான் கறமும் இயற்றுதி நீயென'

அம்பிகை முப்பத்திரண்டறம் செய்த தலமாகிய காஞ்சிபுரத்திலும், பின் 3வது பாராவில் குறித்துள்ள வண்ணம் சிவாசாரிய பட்டர்களுக்குக் காசியாத்திரை உதவி அளித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தரும நிதி நிறுவப்பெற்றது. இது 'மதுரை-காஞ்சி சிவாச்சாரிய பட்டர்கள் காசியாத்திரை நிதி' எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ. 10,000/- (ரூபா பத்தாயிரம்) இது ஆண்டுதோறும் 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946-அரசியல் கடன் பத்திரம் எண் சி.ஏ. 229930 - ரூ. 10,000/- நம்மால் 29—3—60ல் நிறுவப் பெற்றுள்ள மதுரையிலும் காஞ்சியிலும் அன்னம்பாலிப்பு வகை யரு நிதிச் சாசனத்தில் 6-வது பாராவில் கண்டவண்ணம் இத் தருமம் நிறுவப் பெற்றது. இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெற்று வரும்.

3. இச் சேமவைப்பினின்று ஆண்டுதோறும் வரும் வட்டித் தொகையைக் கொண்டு மதுரையிலும் காஞ்சிபுரத்திலும் சிவாசாரிய பட்டர்களுக்கு இதனடியில் விவரித்துள்ளவாறு காசி யாத்திரை உதவி ஆண்டுதோறும் அளிக்கப்பெற்று வரும்.

அ. மதுரையில் – ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் ஸ்ரீ மீனுட்சிக்கும் ஸ்ரீ சொக்கநாதருக்கும் பூசனை புரியும் சிவாச்சார்ய பட்டர்களில் ஒருவர்க்குக் காசி யாத்திரை உதவியாக ரூ. 160/-ம், காஞ்சியில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயிலிலும், குமரகோட்டத்திலும் பூசனை புரியும் சிவாசாரியர்களில் யாரேனும் ஒருவருக்குக் காசி யாத்திை உதவியாக ரூ. 135/-ம் ஆண்டுதோறும் அளிக்கப் பெற்றுவரும்.

ஆ. மதுரையிலிருந்தும் காஞ்சியிலிருந்தும் காசி யாத்திரை போக விரும்பும் ஷி சிவாச்சாரிய பட்டர்கள் விஜயதசமிக்குள்ளாகத் தம் விருப்பத்தைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் அவர்களுக்கு எழுதிக்கொள்ளவேண்டும். மதுரைக்கு ஒருவரும் காஞ்சிக்கு ஒருவருமாகக் காசியாத்திரை உதவியளிக்கும் உத்தரவு அனுப்பப்பெறும். காசியாத்திரை உதவிபெற உத்தரவு பெற்றவர் கார்த்திகை மாதக் கடைசியில் யாத்திரை தொடங்கவேண்டும். யாத்திரை தொடங்குங்கால் காசியாத்திரை உதவித் தொகையில் ரூ. 80/- மதுரையிலிருந்து புறப்படுபவர்க்கும் ரூ. 70/- காஞ்சியிலிருந்து புறப்படுபவர்க்கும் அளிக்கப்பெறும். காசி யாத்திரை முடித்துத் திரும்புங்கால் எஞ்சிய தொகை (மதுரை பட்டருக்கு ரூ. 80/-ம் காஞ்சி சிவாச்சாரியர்க்கு ரூ. 65/-ம்) காசியில் ஸ்ரீ குமாரசுவாமி மடத்தில் அளிக்கப் பெறும்.

இ. இவ்விரு தலங்களில் இருந்தும் மேற்கண்ட முறையில் காசிக்குச் சென்ற இருவருக்கும் காசியில் நமக்குச் சொந்தமான குமாரசாமி மடத்தில் உண்டியும் உறையுளும் அளிக்கப் பெறும்.

ஈ. காசி யாத்திரை முடித்துத் திரும்புங்கால் பிரயாகைக்குச் சென்று தம்மால் கொண்டு வரக்கூடிய அளவு கங்கா தீர்த்தத்தை அவ்விருவரும் எடுத்துக் கொண்டு மகரசங்கிராந்

திக்குள் தத்தம் தலத்திற்குத் திரும்பி வரவேண்டும். மதுரைக் குத் திரும்பியவர் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரருக்கும் காஞ்சிக் குத் திரும்பியவர் ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கும் குமரக்கோட்டப் பெருமானுக்கும் தாம் கொணர்ந்த கங்கா தீர்த்தத்தை மகர சங்கிராந்தி புண்ணிய காலத்தில் அபிஷேகம் செய்வித்து, அங் ஙனம் அபிஷேகம் செய்த விவரத்தைத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

உ. எந்த ஆண்டிலேனும் மேற்கண்டவாறு யாத்திரை தொடங்கவில்லை என்ருல் அங்ஙனம் எஞ்சிய தொகை மட்டும் காஞ்சியில் நம்மால் நிறுவப்பெற்றுள்ள தரும நிதிகளின்படி புனுகு சட்டம் திருவேகம்பப்பெருமானுக்குச் சாத்தும் ஒருநாளில் காஞ்சிபுரத்திலுள்ள சிவாச்சாரியர்களுக்கு விசேஷ அன்னம் பாலிப்பு நடத்தச் செலவிடப்பெறும்.

4. மேலே விவரித்துள்ள தருமம் தவிர்த்து வேறு எம் முறையிலும் இவ்வட்டி வருமானம் செலவிடப்பெறமாட்டாது.

5. இச்சேமவைப்பு நம் பேரிலும் நமக்குப் பின் உரிமை யுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இச்சேமவைப்பு அரசின ரால் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப்பெற்றுவரும்.

திருப்பனந்தாள்,
21-9-1962. } (Sd) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office on 21-9-1962 as No. 32 of 1962 of Book 4, volume 50 pages 66 to 70.

# மணிமேகலை

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ்விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

[மலர் 13. இதழ் 9-ன் தொடர்ச்சி]

மணிமேகலையைக் கண்ணகியின் மகள் என்று கூறியே கூலவாணிகன் சாத்தனுர் தமது நூலைத் தொடங்குகிறுர்.

'காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை'

என்ற வரிகளே முதன்முதலில் மணிமேகலையை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. துறவுபூண்ட மாதவி, மணிமேகலை யாகிய இருவரையும் பற்றிச் சித்திராபதி கவலைப்படுகிறுள் என்றே காப்பியக்கதை துவங்குகிறது. அவள்,

'மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை'—யாதலினுலே,

'அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்'

என்று மாதவியின் வாயிலிட்டு ஆசிரியர் இதைத் தெரிவிக்கிறுர்.

மணிமேகலை பேரழகு படைத்தவள். அவளது கடைக்கண் உகுநீர் கண்டால் காமனும் தனது படைகளை யெறிந்து விட்டு நடுங்குவான். அந்தப் பாவையை,

'ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடிய ரன்றோ பெற்றியின் நின்றிடின்!'.

என்று அவளது தோழியாகிய சுதமதி கூறுகிறுள். பின்னர் அவள் மலர்வனம் சென்றபோது அவளது தவவடிவைக் கண்ட

---

'காப்பியப் பெண்கள்' என்ற தொடரில் ஒலிபரப்பப்பட்டது. வானெலியாரின் இசைவு பெற்றது.

வர்கள், 'அணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய தாயோ கொடியள், தகவிலள்' என்று வருந்துகிறார்கள்.

இப்படிப்பட்ட மணிமேகலையைக் காதலித்த உதயகுமரனோ அவளைக் கணிகையாகவே கருதுகிறான். அவளது துறவியல்பைச் சுதமதி கூறிய பின்னும்,

'அஞ்சொல் ஆயிழை நின்திறம் அறிந்தேன்
வஞ்சி நுண்ணிடை மணிமே கலைதனைச்
சித்திரா பதியாற் சேர்தலும் உண்டென்று'

சொல்லிப் போகிறான்.

இத்தகையவன் பின்னால் தன்மனம் போயதைக் குறித்து மணிமேகலை வியக்கிறாள்.

"கற்புத் தானிலள் நற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்று
இகழ்ந்தன னாகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயின் கெடுக தன்திறம்."

என்றெல்லாம் மணிமேகலை கருதுகிறாள். இதனால், தான் பெற்ற கலையறிவு, சமய நூலறிவு முதலியவற்றால் தன்னையும் தன்மனத்தையும் வேறாக வைத்து, எண்ணி, மனத்தை அறிவால் அடக்கும் திறனுடையவள் மணிமேகலை என்பது புலப்படும்.

மணிபல்லவத்தில் சுதமதியைக் காணாது வருந்துவது, 'விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள், வஞ்சம் செய்தனள் கொல்லோ வறியேன்' என்று ஐயுற்றது, உதய குமரன் வந்து 'நல்லாய் என்கொல் நற்றவம் புரிந்தது, சொல்லாய் என்று துணிந்துடன் கேட்ப'

"என்னமர் காதலன் இராகுலன் ஈங்கிவன்
தன்னடி தொழுதலும் தகவென வணங்கி
தோன்று காதலன் சொல்லெதிர் மறுத்தல்
நன்றி யன்றென நடுங்கினள் மயங்கிக்
கேட்டது மொழிவேன்."

என்று கூறியது ஆகியவற்ருல் அவளது பெண்மையியல்பைக் கூலவாணிகன் சாத்தனுர் நன்கு புலப்படுத்துகிருர்.

சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட பகுதியில் மணிமேகலை யின் அறிவு நுட்பத்தைப் பலவகையாலும் கண்டு மகிழ்கிருேம்.

பதியிலார் குலத்துப் பிறந்து பருவமும் எழிலும் சிறந்து விளங்கிய ஒருபெண்,

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது....
முப்பு விளிவுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்....
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து,"

துறவு மேற்கோள் வதையும்,

"மொய்த்த மூவறு பாடை மாக்களில்
காணுர், கேளார், கால்முட மானேர்
பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோய் உற்ருேர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்

'பன்னூ ருயிரம் விலங்கின் தொகுதியும்
மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி
அருந்தியோர்க் கெல்லாம் ஆருயிர் மருந்தாய்ப்'.

பிச்சையிடும் பெரும் பணியை மேற்கொள்வதையும் இந்நூலா சிரியர் காட்டுகிருர்.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்ருேர் உறுவது அறிக"–

என்பதை உலகுக்கு எடுத்துக் கூறுவதற்காக, உடலை வாணி கப் பண்டமாகக் கருதும் குலத்திற் பிறந்தவளாக ஒருபெண் பாத்திரத்தைப் படைத்து, அவளுக்குத் துறவு தந்து காட்டு கிருர், கூலவாணிகன் சாத்தனுர்.

இந்த வகையில், காப்பியப் பெண்மணிகளின் படைப்பிலே மணிமேகலை ஒருதனிச் சிறப்புடைய பாத்திரமாகும்.

# HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

---

[மலர் 13, இதழ் 9-ன் தொடர்ச்சி]

## I

## SAMBANDAR

(Tamil: TIRU JNANA SAMBANDAMURTI SWAMI)

23. செய்யனேதிருவாலவாய்மேவிய
வையனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே.

The story here is that the Jains had set fire to Sambandar's house. He prayed in this stanza that the fire, transformed into a fever, might go to the Pandyan king, then a Jain. It did so, and the king was converted.

23. O Thou whose form is fiery red,
    In holy Alavay, our Sire,
In grace deliver me from dread.
    False Jains have lit for me a fire:
O, let it to the Pandyan ruler go,
    That he the torture of slow flame may know.

(To be Continued)

---

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

# மதுரைக் கலம்பகம் உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
"திருவண்ணுமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த
சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி"
வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

மலர் 13- இதழ் 9-ன் தொடர்ச்சி

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந்
தமிழ்க்கூடல் விகிர்த கேண்மோ
ஏதமினின் றிருவுருவொன் றீருருவாய்
நின்றதினு மிறும்பூ தந்தோ
போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத்
தொருவனிரு பூவை மார்க்குக்
காதலனுய் மற்றுனக்கோர் காதலியாய்
நிற்பதொரு காட்சி தானே. 96

மேன்மை மிக்க பலகலைகளை நிரப்பி அறம் வளருகின்ற தமிழ் வழங்கும் மதுரை யம்பதியிலே எழுந்தருளியுள்ள எவரினும் வேறுபாடுடையவனே! கேட்பாயாக! பூக்கள் விரிந்த பசிய துழாய் மாலையை அணிந்த மேகம் போலும் நிறத்தை உடைய ஒருவனுகிய திருமால், சீதேவி, பூதேவி யென்னும் இரண்டு பெண்களுக்குக் காதலனுகவும் உனக்கு ஒப்பற்ற காதலியாகவும் நிற்கின்ற ஒருகாட்சி. கெடுதலில்லாத உனது அழகிய திருவுருவம் ஒன்றே ஆணும் பெண்ணுமாகிய இரண்டு வடிவமாகி நிற்பதைக் காட்டிலும் அதிசயத்தை விளைவிப்பதாகும்.

காண்டகைய செல்வக் கடம்பவனத் தானந்த
தாண்டவஞ்செய் தாண்டவர்நீர் தாமன்றே—பூண்டடிய
ருள்ளத் திருப்பீரெம் முள்ளத்தை யும்முமதா
மெள்ளத் திருப்பீர் மிக. 97

மெய்யடியார்களது மனத்தில் தங்கி இருப்பவரே! யாவரும் விரும்பிக் காணத்தக்க எல்லாச் செல்வங்களையும் உடைய கடம்பவனத்தில் ஆனந்தத் திருக்கூத்தாடி எல்லா உயிர்களையும் அடிமை கொண்டவர் நீரே அல்லவா? எமது மனத்தையும் உம் வசம் ஆகும்படி மெதுவாகவும், நன்ருகவும் திருப்புவீராக!

மிக்கார் முகத்தருள் கூடற் பிரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே. 98

அன்புமிக்க அடியார்கள்பால் அருளைப் புரிகின்ற, கூடலம் பதியிலே எழுந்தருளியுள்ள, இறைவராகிய சொக்கேசரது திருக் கரத்திலுள்ள நஞ்சை உடைய பாம்பு நாணியால் கட்டப்பெருத வில்லாகிய மேருவை ஒத்த தேரைச் செலுத்துதலில் வல்லவனே! வானத்தில் பரவிச் செல்லுகின்ற இந்த மேகங்கள் எமது உயிர் என்று சொல்லத்தக்க தலைவியினது முகத்திலுள்ள அகன்ற கண்களிலிருந்து பெருகுகின்ற நீர் வெள்ளமாகிய ஊழிக் காலத்துப் பொங்கும் கடலை மொண்டு கொள்ள எழுந்தன போலும்!

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்த மிசையே
மலராகி டந்த நயனர விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி யுடலேசு மந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெ ரிவதே.99

உயிரில்லாமல் வெற்றுடம்பைச் சுமந்து திரிபவர்களாகிய சிலர் வெந்து விழுந்து அழியும்படி விடியாத இராப்பொழுதில் ஒரு நெருப்பாகிய சந்திரன் புகையாமல் நின்று எரிவதை, திருப்பாற்கடலிலே தங்குகிற திருமாலாகிய அம்பை, முப்புரங் களின்மேல் ஏவிய திருத்தோளை உடையவரும், திருவடித் தாமரைகளின் மேல் இட்ட பூக்களாகின்ற அத்திருமாலின் கண் மலர்களை உடையவருமான மதுரைக் கிறைவர் திருமுன்பு யாரும் சென்று சொல்லுகின்ருரில்லை.

தேன்வ ழங்குக டுக்கை யார்கரு மான்வ ழங்குமு டுக்கையார்
திருவி ருந்தவி டத்தி ஞரருள் கருவி ருந்தந டத்திஞர்
மான டங்கிய வங்கை யார்சடைக் கான டங்கிய கங்கையார்
வைகை யொன்றிய கூட லாரிவள் செய்கை யொன்றையு நாடலார்
கான வேயிசை கொல்லு மாலுற வானவேய்வசை சொல்லுமால்
கன்றி யன்றிலி ரங்கு மாலுயிர் தின்று தென்றனெ ருங்குமால்
தீநி லாவனல் சிந்து மாற்கொல வேனி லான்மெல முந்துமால்
தினமி டைந்திடை நொந்த போன்மகண் மனமி டைந்ததுணர்ந்துமே.

புல்லாங் குழலின் இசைப்பாட்டுத் தலைவியைத் துன்புறுத்தும். உறவினர்களான மக்கள் இவள்மேல் கட்டுக் கதையான பழிச் சொற்களைச் சொல்லுவர். அன்றிற் பறவைகள் இவளைத் துன்புறுத்தி ஒலிக்கும். தென்றல் காற்று இவளது உயிரைத் தின்றுகொண்டு அருகில் வரும். கொடிய நிலவு நெருப்பைச் சிதறும். வேனிற்காலத்துக்கு உரிய மன்மதன் இவளைக் கொல்லுதற்கு மெல்ல முற்படுவான். இவளது இடை நாள் தோறும் சிறிதுசிறிதாக இளைத்து வாடுதல் போல மனம் மெலிந்ததை அறிந்தும், தேனைச் சொரிகின்ற கொன்றை மாலையை அணிந்தவரும், கரிய யானையினுல் வழங்கப் பெற்ற தோலை உடையாகக் கொண்டவரும், உமா தேவியார் தங்கிய இடப்பாகத்தை உடையவரும், கருணை குடிகொண்ட திருக்கூத்தை உடையவரும், மான் தங்கிய அழகிய கையை உடையவரும், சடைக்காட்டில் அடங்கிய கங்கையை உடையவரும், வைகைநதி கூடிய கூடற் பதியை உடையவரும் ஆகிய சொக்கேசர் இவளது செயலொன்றையும் விரும்பி நாடுகின்ருரில்லை!

உடையதொர் பெண்கொடி திருமுக மண்டல
மொழுகுபெ ருங்கருணைக்
கடலுத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புள
கடவுணெ டும்பதியாம்
புடைகொள்க ருங்கலை புனைபவள் வெண்கலை
புனையுமொர் பெண்கொடியா
வடகலை தென்கலை பலகலை யும்பொலி
மதுரைவ ளம்பதியே. 101

பக்கங்களிலே சூழ்ந்துள்ள கருங்கடலாகிய ஆடையைத் தரிக்கின்ற நிலமகள் வெள்ளைச் சேலையை உடுத்துள்ள ஒரு பெண்கொடியைப் போல ஆடும்படி, வடமொழியும், தென் மொழியும், மற்றும்பல மொழிகளும் விளங்குகின்ற, மதுரை யாகிய, வளப்பம்மிக்க, திருப்பதியானது, உடையவளாகிய ஒப்பற்ற பூங்கொடி போன்ற உமாதேவியினது திருமுக மண்டலம் உதவுகின்ற பெரிய திருவருட்கடலைச் சொரியும் இரண்டு கயல்மீன் போன்ற திருக்கண்கள் பாயும் திருத்தோள் களை உடைய சொக்கேசப் பெருமானதுபெரியதிருத்தலம் ஆகும்.

வள்ளைவாய் கிழித்துக் குமிழ்மறிந் தமர்த்த
மதரரிக் கண்ணியு நீயு
மழலைநா றமுதக் குமுதவாய்க் குழவி
மடித்தலத் திருத்திமுத் தாடி
யுள்ளநெக் குருக வுவந்துமோந் தணைத்தாங்
குகந்தனி ரிருத்திரா லுலக
மொருங்குவாய்த் தீருக் கொருதலைக் காம
முற்றவா வென்கொலோ வுரையாய்
வெள்ளிவெண் ணிலவு விரிந்தகோ டீரம்
வெஞ்சுடர்க் கடவுளுங் கிடைத்து
வீற்றிருந் தனைய விடுசுடர் மகுட
மீக்கொளத் தாக்கணங் கனையார்
கள்ளவாட் கருங்கண் ணேறுகாத் திட்ட
காப்பென வேப்பலர் மிலைச்சுங்
கைதவக் களிறே செய்தவக் கூடற்
கண்ணுதற் கடவுண்மா மணியே. 102

வெள்ளி போன்ற வெண்மையான நிலவொளி விரிந்த சடைமுடியை வெப்பமான ஒளியை உடைய சூரியனும் இடமாகப் பெற்று அதில் பொருந்தியிருந்தாற் போன்ற வீசுகின்ற ஒளியை உடைய திருமுடி. முடியின்மேற் பொருந்த இலக்கு மியை ஒத்த பெண்கள் வஞ்சனையை உடைய வாள் போன்ற கருங்கண்களின் பார்வையால் வந்த கண்ணேற்றைத் தாக் காதபடி செய்த பாதுகாப்பைப் போல வேப்பம்பூ மாலையைத்

தரித்துள்ள பாண்டியர்களுள் ஆணையானை போன்ற சுந்தர பாண்டியனே! நீ எழுந்தருளியிருக்க தவஞ்செய்த கூடற்பதியில் கண்ணை நெற்றியில் உடைய கடவுட் பெருமணியே! வள்ளை போன்ற காதின் வாயைக் கிழித்து, குமிழம்பூப் போன்ற மூக்கின் மேல் நீண்டு போர் செய்கின்ற செழித்த செவ்வரி படர்ந்த கண்களை உடையவளான உமாதேவியும் நீயும் மழலைச் சொல் தோன்றுகின்ற அமுதத்தை உடைய குமுதம் போன்ற வாயையுடைய குழந்தையாகிய முருகக் கடவுளை மடியின் மேல் வைத்துக் கொண்டு முத்தமிட்டு மனம் நெகிழ்ந்து உருகும்படி மகிழ்ந்து உச்சி மோந்து அணைத்து ஆங்கே உகந்து இருக்கின்றீர்கள். உலகம் முழுவதையும் பெற்ற உங்களுக்கு ஒரு குழந்தையிடத்தில் ஆசை வந்த விதம் யாதோ சொல்லுவாயாக?

கட்புலங் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத் தொருபரி யுகைத்தோய்
புட்கொடி. யெடுத்தொரு பூங்கொடி தன்னெடு
மட்கொடி தாழ்ந்த வான்கொடி யுயர்த்தோ
யோரே ழாழி சீர்பெறப் பூண்டு
முடவுப் படத்த சுடிகையுட் கிடந்து
நெடுநிலை பெயரா நிலைத்தே ருர்ந்தோய்
மீனவர் பெருமான் மானவேல் பிழைத்தாங்
கெழுபெருங் கடலு மொருவழிக் கிடந்தென
விண்ணின் றிறங்குபு விரிதிரை மேய்ந்த
கொண்மூக் குழம்பு கொலைமதக் களிற்றெடும்
வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்
காற்றல்கொ டுற்றபா கலைத்தனர் பற்றத்
திரியமற் றெம்மைத் தீச்சிறை படுக்கெனப்
பரிதிவே லுழவன் பணித்தனன் கொல்லென
மெய்விதிர்த் தலறுபு வெரீஇப்பெயர்ந் தம்ம
பெய்ம்முறை வாரிப் பெயும்பெய லல்ல
நெய்பா றயிர்முதற் பல்பெய றலைஇய
பெருவளஞ் சுரந்த விரிதமிழ்க் கூட

லிருநல மடந்தைக் கொருமுடி கவித்தாங்
கிந்திர னமைத்த சுந்தர விமானத்
தருள்சூற் கொண்ட வரியிளங் கயற்கண்
மின்னுழை மருங்குற் பொன்னொடும் பொலிந்தோய்
துரியங் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத் தொருபெருங் கோயிலுண்
முளையின்று முளைத்த மூல லிங்கத்
தளவையி னளவா வானந்த மாக்கட
னின்பெருஞ் சிறப்பின் மதிநலங் கொளினே
பேதமைப் பாலரே பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
யிணையநின் றன்மைமற் றெம்ம னொரு
நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழியெம் பெருமநின் றகவே
வாழியென் மனனு மணிநா வும்மே. 103

கண்ணாகிய பொறிக்குப் புலப்படாது, காதாகிய பொறியிலே புகுந்து, மனத்தினுள்ளே தங்கி, வாயிலே வந்து, சிவந்த நாக்காகிய முற்றத்தில் நல்ல திருக்கூத்தாடுகின்ற, பலவகைப் பட்ட எடுத்தல் படுத்தல்களையுடைய, ஒப்பற்ற, வேதமாகிய குதிரையைச் செலுத்தியவனே! கருடக் கொடியை உயர்த்திப் பூங்கொடி போன்றவளாகிய திருமகளும், நிலமகளும் தங்கிய திருமாலாகிய, பெரிய விடைக் கொடியை உயர்த்தியவனே! ஒப்பற்ற ஏழு கடல்களைச் சிறப்புப் பொருந்தச் சுற்றி வளைந்த படத்தையுடைய ஆதிசேடனின் உச்சியிற் பொருந்தி, நீண்டு, நிலைத்து நிற்றலை நீங்காத தன்மையை உடைய பூமியாகிய தேரைச் செலுத்தியவனே! மீனக்கொடியை உடைய பாண்டியர் களிற் சிறந்த உக்கிர பாண்டியனது சிறந்த வேற்படைக்குத் தப்பி மதுரையில் ஏழு பெரிய கடல்களும் ஒருங்கே வந்து சேர்ந்தன என்று கருதி வானத்திலிருந்து இறங்கி வந்து அவ்வெழு கடல் குளத்தில் பரவிய அலைகளை உடைய நீரைப் பருகிய மேகங்களைத் திரண்டு கொல்லுந் தன்மையை உடைய மதயானை களுடன் வேறு பாடறியாமல் பாகர்கள் மின்னலாகிய கொடி களினால் சுற்றிக் கட்டித் தமது வலிமையினால் வருத்திப் பிடிக்க

அம்மேகங்கள் உலாவுகின்ற எங்களை கடுங்காவலில் பிடித்து வைக்க என்று கதிரவன் போன்று வேலை உடைய பாண்டியன் கட்டளையிட்டானே என எண்ணி உடல் நடுங்கி அலறி அஞ்சி விலகிச் சென்று அனைவரும் வியப்படையும் படி பெய்ய வேண்டிய முறையில் வாரிப் பெய்கின்ற நீர் மழை மாத்திரம் அல்லாமல், நெய்யும், பாலும், தயிரும் முதலிய பலவற்றின் மழைகளைப் பெய்தலால் பெருவளப்பம் சுரந்த விரிந்த தமிழ் வழங்கும் மதுரையில் பெரிய நிலமகளுக்கு ஒரு முடியைச் சூடினாற்போல, தேவேந்திரன் அமைத்த அழகிய பொன் விமானத்தில் கருணையைக் கருக்கொண்ட செவ்வரி படர்ந்த இளமையான கயல் மீன் போன்ற கண்களையும் மின்னல் போல நுண்ணிய இடையையும் உடைய, பொன்போன்ற மீனாட்சி அம்மையுடன் எழுந்தருளி யிருக்கின்ற சொக்கேசப் பெருமானே! நான்காவது நிலையைக் கடந்த, துவாத சாந்த மென்னும் பெரிய வெளியிடத்தில் ஒரு பெரிய கோயிலில் முளையில்லாமல் முளைத்த மூலலிங்க வடிவமாக உள்ள அளவு கருவிகளால் அளக்கப் படாத இன்பப் பெருங்கடல் போன்றவனே! உனது பெருந்தன்மையை நாங்கள் எடுத்துச் சொல்லுவோமென்று வேத புருடனும், விராட்புருடனுமாகிய இவர்கள் நிலைபெற்ற பெருஞ் சிறப்பையுடைய தமது நல்லறிவில் எண்ணினால் அவர்கள் பெரிதும் அறியாமை உடையவரே ஆவர். இத்தகைய உனது பெருந்தன்மையை எம்மை ஒத்த எளியவர்களுங் கூட நினைக்கவும், சில சொற்களைச் சொல்லித் துதிக்கவும் நீ செய்தலினால், எமது தலைவனே, உனது பெருந்தன்மை நெடிது வாழ்வதாக! உன்னை நினைத்தலும் துதித்தலும் செய்கின்ற எனது மனமும் மேலான நாக்கும் வாழ்வனவாக!

முற்றிற்று

# திருவுந்தியார் - விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

[மலர் 13. இதழ் 9-ன் தொடர்ச்சி]

17. திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற.

(வி-ரை) மக்கள் குலம் கல்வி வைத்த நிதி பெண்டிர் என்பனவற்றைத் தேடியும் அநுபவித்தும் வரும் முகமாக ஏற்படும் ஆரவாரத்தை விடுத்துத் திருவருளே கண்ணாகக்கொண்டு வழிபட்டுவரின், ஆனந்தக் கூத்தனின் திருச்சிலம்போசை கேட்கும். அவ்வொலி வழியே சென்று வழிபடல் வேண்டும் என்பதாம். இதுகாறும் சென்ற மயக்க நெறிநீங்க அங்ஙனம் வழிபடுதலே சாலச்சிறந்ததாம் என்றவாறு.

உயிர்கள் தாம் விரும்பியவாறே பொறிவழிச் சென்று நுகருதலை மயக்கநெறி என்றும், அம்மயக்க நெறியினின்றும் நீங்கி இறைவனது திருவடியைச்சார நினைதலே நன்னெறி என்றும் கூறப்படும். இங்ஙனம் நன்னெறிக்கண் 'தலைப்பட்டு இறைவனைச் சார அணையும் உயிர்களை, அவனது பரநாதம் என்றும் சிலம்பு ஆரவாரித்து வரவேற்கும். அரசிளங்குமரன் ஒருவன், தனது பகைவனை அழித்துவிட்டுத் தனது நகருக்குச் செல்லின், தனது தந்தையாம் பேரரசனும், அவனது இயங்களும் மிக்க மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளுமாறுபோல் உயிர்களும் தமக்குப் பகைவராயுள்ள ஐம்புல வேடர்களையும் ஓட்டித்

தமது தந்தையாம் இறைவனது திருவடியை அணுகின், அவ் விறைவனும், அவனது திருச்சிலம்பும் மகிழ்ச்சியுடன் ஏற்று அவ்வுயிர்களைப் பாராட்டும் என்பதாம். இங்ஙனம் இறைவனது திருமுன்னிலையிலேயே இருக்கும் உயிர்களை, ஐம்புல வேடர்கள் மீண்டும் வந்து தாக்கார்.

'என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக் குறிப்பே' என்னும் திருவாக்கும், சேரமான் பெருமாள் நாயனரின் அநுபவமும் இவ்வுண்மையை விளக்கி நிற்பனவாம்.

"ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடியுளே கண்டு தீர்ந்தற்ற வாறே"

என்னும் திருமந்திரமும்,

ஓசையெலாம் அற்ருல் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசைவழி யேசென் றெத்தொடுங்கில்—ஓசையினில்
அந்தத்த னத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து.

என்னும் திருக்களிற்றுப்படியாரும் இதனேடு ஒப்பிட்டு உணர் தற்குறியன.

18. மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே உந்தீபற
அதுவே இங்குள்ளதென் றுந்தீபற.

(வி-ரை) மேற்கூறியவாறு இறைவன் திருமுன்னிலையில் நின்று நேர்படக் கும்பிட்டவர்களுக்கு அறியாமை, அறிவு என்ற இரண்டும் நீங்கும். இங்ஙனம் உள்நின்றுணர்த்தி ஓவாது இன்பமளிக்கும் திருவருளை மறவாது போற்றுவதே இவ்விடத்துச் செய்யத்தக்கதாம் என்றவாறு.

மருள் என்பது அறியாமையைக் குறிக்கும். "அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" என்பவாகலின் இறைவனது

திருமுன்னிலையில் இம்மருள் கதிரவனைக் கண்ட பனியென நீங்கும் என்பதாம். அடுத்து அறிவு நீங்கும் என்றது இறைவனையன்றிப் பிறவற்றையறியும் யறிவு நீங்கும் என்பது போதர நின்றது.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

என்னும் திருக்களிற்றுப்படியார் இதனோடு ஒப்பிட்டு உணர்தற் குரியது.

19. கருது வதன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன அரியனென் றுந்தீபற.

(வி - ரை) தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்பன் இறைவன் ஆதலின், உயிர்கள் அப்பெருமானை நினையும் பொழுதே அவனும் அவனையும் அவனது கருத்தினையும் தன தாக்கிக் கொண்டு, தானும் தனது கருத்துமே முன்னிற்பதாக ஆக்குவன். அத்தகைய கருணைப் பெருவெள்ளம் உடையன என்பதை அறிவிக்கவே அவனும் உமையொருபாகனாக நின்று உயிர்களுக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றான். அப் பெருமானை அவனது திருவருள் கொண்டே நினைந்து மகிழ்வ தன்றி உயிர்கள் தம்மறிவு அதனால் காணும் தகைமையதன்று என்பதாம்.

“ அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும்—சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு”.

என்னும் திருக்களிற்றுப் படியார் இப்பாடலை முகந்து நின்று விளக்குதல் காணலாம்.

—— (வளரும்)

# மரம் முந்தியா? வித்து முந்தியா?

திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள்

மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும் கேள்வியைக் கற்றவர் முதல் கல்லாதார் ஈருக எல்லாரும் கேட்பதுண்டு. மரம் இன்றி வித்தோ, வித்தின்றி மரமோ தோன்ருதாதலால், இக்கேள்விக்கு விடை இல்லை என்றே நாம் நினைக்கிரேம். ஆனுல் சைவசித்தாந்தத்தில் இதற்கு விடை கூறியாக வேண்டிய கட்டம் வருகிறது.

வினைக்கீடாக உயிர்களுக்கு உடல்கள் அமைகின்றன என்பது சைவசித்தாந்தக் கொள்கையாகும். இது பற்றிச் சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவம் பின்வருமாறு அருளிச் செய்திருக்கிருர்:—

"உடற்செயல் கன்மம் இந்த உடல்வந்த வாறே தென்னின்
விடப்படும் முன்னுடம்பின் வினைஇந்த உடல்வினைக்குத்
தொடர்ச்சியால் ஒன்றுக்கொன்று தொன்று தொட்டநாதி வித்தின்
இடத்தினின் மரம் மரத்தின் வித்தும்வந் தியையு மாபோல்

இதன் பொருள் :- "உடலின் முயற்சியால் வினை உண்டாகும். அவ்வாருனுல் இவ்வுடல் உண்டாவதற்குக் காரணம் யாதெனின் விடப்பட்ட முன் உடம்பின் வினையாம். அவ்வினையே இவ்வுடம்பை உண்டு பண்ணும். இவ்வாறு உடம்பால் வினையும் வினையால் உடம்பும் வருதல், வித்தின் கண் மரமும் மரத்தின் கண் வித்தும் வந்து பொருந்து மாறு போலாம். வினை, உடல் என்னும் இவ்விரண்டும் ஒன்றுக் கொன்று காரண காரியமாய்த் தொன்றுதொட்டு அநாதியாக வரும்."

---

"சித்தாந்தம்" இதழில் வெளியான இக்கட்டுரை ஆசிரியரின் இசையுடன் வெளியிடப் பெறுகின்றது.

இச் செய்யுளிலிருந்து உடல் அமைவதற்கு வினை காரணம் என்றும், வினைசெய்வதற்கு உடல் காரணம் என்றும் தெரிய வருகிறது. அங்ஙனமானால் உடல் முந்தியா? வினை முந்தியா? என்னும் கேள்வி இயல்பாகவே எழுகிறது. இதற்கு விடை காணும் பொழுதுதான் மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும் கேள்விக்கும் விடை பிறக்கிறது.

தொன்றுதொட்டு அநாதியாக வருவதால் உடல், வினை என்னும் இவ்விரண்டில் எதுமுந்தி என்றுகூற இயலாது என்று இக் கேள்விக்கு விடை இறுத்தோமானால், அது யார்க்கும் திருப்தியை அளிக்காது. இதனை நன்கறிந்த பின்வந்த சந்தானசாரியரான உமாபதி சிவம், இங்கு அருணந்தி சிவம் கூறுவது புனருற்பவம் பற்றியாதலால், "அநாதி" என்பது "பிரவாக அநாதியைக்" குறிக்கும் எனக்கொண்டு, இக் கேள்விக்குச் சரியான விடையைச் சிக்கறுத்துப் "போற்றிப் பஃறொடை"யில் கூறியருளியிருக்கிறார். அதனை ஈண்டு ஆராய்வோம்.

அநாதி கேவலத்தில் ஆன்மாக்களுக்கு எந்தவகையான உடலும் இல்லை. காரண, சூக்கும, தூல சரீரங்கள் யாவும் பின்னே இறைவனால் அவைகளுக்கு மாயையினின்றும் ஆக்கி அளிக்கப்பட்டவையாகும். மேலும் அக் கேவல நிலையில் ஆன்மாக்களின் அறிவு, இச்சை, செயல்களை நிகழவொட்டாமல் ஆணவமலம் மறைத்து நிற்பதால், அவை எந்த வினையையும் ஆற்றுவதற்கு இல்லை. இதனால் இறைவன் அவைகளுக்கு முதன் முதல் படைத்தளிக்கும் உடல்கள் வினைகாரணமாக அமையமுடியாது. எனவே, ஆணவமலக் கட்டினின்றும் உயிர்களை விடுவிக்க வேண்டும் என்னும் கருணையால், இறைவன் தன் விருப்பத்திற்கே முதன்முதல் அவைகளுக்கு உடல்களைப் படைத்தளிக்கின்றான் என்பது தெளிவாகும்.

வினை காரணமாக அமையாமல் இறைவனின் கருணை காரணமாக அமைகின்ற உடல்கள், எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே தன்மையனவாகவே இருத்தல் வேண்டும். அங்ஙனம் இல்லாமல் பல்வேறு வகையான உடல்கள் உயிர்களுக்கு

அமைந்திருக்கக் காரணம் என்ன? இங்கு மிக நுண்ணியதான ஒரு கருத்தைச் சைவசித்தாந்தம் வெளியிடுகின்றது. இது சைவ சித்தாந்தத்திற்கே உரிய தனிக் கருத்தாகும்.

ஆன்மாக்கள் பல என்று கூறுகிறோம். எல்லா ஆன்மாக்களும் ஒரே மாதிரியான இயல்புகளை உடையன என்றால் அவை பலவாக இருத்தல் முடியாது. இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமை யில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாது. (சிவஞான போதம்-பிரமாணவியல்-முதற் சூத்திரம் 3-ம் அதிகரண உரையில் சிவஞான முனிவர் கூறுவது காண்க.) இதனால் ஒவ்வோர் ஆன்மாவுக்கும் அதற்கே உரித்தான தனி இயல்புகள் உண்டு என்பது பெறப்படும். இவ்வியல்புகளின் வேறுபாட்டால் ஆணவ மல மறைப்பிலும் வேறுபாடு உண்டாகிறது. அநாதியில் ஆன்மாக்களுக்குள்விஞ்ஞானகலர்,பிரளயாகலர்சகலர்,என்னும்பேதம் வரக் காரணம் என்ன என்பதற்கு, ஆணவமலம் மட்டும் உடைமையால் விஞ்ஞானகலர் என்றும், ஆணவம் கன்மம் ஆகிய இருமலம் உடைமையால் பிரளயாகலர் என்றும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம் உடைமையால் சகலர் என்றும் பகுக்கப்பட்டனர் எனக் கூறுவது சரியான விடையாகாது. ஏனெனில் அநாதியில் எல்லா ஆன்மாக்களுமே ஆணவமல பந்தம் ஒன்றுமட்டும்தான் உடையனவாய் இருந்தன. எனவே ஆணவமல மறைப்பின் வேறுபாட்டாலேயே அவை மூன்றாகப் பகுக்கப்பட்டன என்பதை உணர்தல் வேண்டும். மல சத்தி பலவாதலால் மறைப்பும் பலவேறு வகைப்படும் என்பதும் விஷயத்தைப் போதிய அளவு விளக்கியதாகாது. சடமாகிய மலசத்திக்கு இன்ன ஆன்மாவை இன்ன அளவுதான் மறைக்க வேண்டும் என்னும் உணர்வு இருக்க முடியாது. ஆன்மாக்களுக்குரிய தனிஇயல்பு வேறுபட்டாலேயே (Individual difference) மல மறைப்பிலும் வேறுபாடுகள் ஏற்பட்டன வென்றும், அங்ஙனம் உள்ள வேறுபாட்டிற் கேற்பப் பெரும் பிரிவாய் ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப் பகுக்கப்பட்டனர் என்றும், இங்ஙனம் முவகையாகப் பகுக்கப்பட்டன ரெனினும், ஒவ்வொரு பகுப்பினுள்ளும் ஆன்மாக்களுக்குள்ள தனி இயல்புகள் பலவாதலால், மலமறைப்பு

வேறுபாடும் பலவகையாகும் என்றும் நாம் தெளிந்து கொள்ளல் வேண்டும். இந்நுட்பங்களை எல்லாம் சிவஞானபோதப் பேருரையில் சிவஞான முனிவர் நன்கு விளக்கியுள்ளார். இனி எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு வருவோம்.

அநாதி கேவலத்தில் ஆணவமலத்தால் மறைப்புண்டு, அறிவு, இச்சை, செயல்கள் விளக்கம் இன்றிக் கிடந்த ஆன்மாக்களுக்கு மாயையினின்றும் இறைவன் முதற்கண் நுண்ணுடல்களைப் படைத்தருளுகின்றன். அவன் கருணையைக் காரணமாகப் படைத்தளிப்பதால் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே தன்மையனவான நுண்ணுடல்களையே ஆக்கி அளிக்கின்றன். ஓர் அறிவுமுதல் ஆறறிவு ஈருக உள்ள எல்லா உயிர்கட்கும் நுண்ணுடல் ஒன்று போன்றே உள்ளது. நுண்ணுடல் என்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் மனம், அகங்காரம், புத்தி என்னும் அந்தக்கரணங்கள் மூன்றும் ஆக எட்டுறுப்புக்களால் ஆயதாகும். இறைவன் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே மாதிரியான நுண்ணுடல்களை ஆக்கி அளித்தவுடன் அவற்றின் அறிவு, இச்சை, செயல்கள் சிறிது விளக்கம் பெறுகின்றன. நாம் முன்னர் எடுத்துக்காட்டியவாறு ஆன்மாக்களுக்குரிய தனி இயல்பு வேறுபாட்டாலும், அவ்வேறுபாட்டால் ஏற்பட்ட மலமறைப்பு வேறுபாட்டாலும் நுண்ணுடற்கண் உள்ள மனத்தில் அவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு விதமான விருப்பு, வெறுப்புக்கள் தோன்றுகின்றன. தெளிவுபெருத இவ்விருப்பு, வெறுப்புக்களைக் குறிப்பால் உணர்ந்து, இவைகளையே துவக்க வினைகளாகக் கொண்டு, இறைவன் உயிர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு தூலஉடல்களைப் படைத்தளிக்கின்றன். இதனுலேயே தூலஉடல்கள் பலவாருக அமையவேண்டுவதாயிற்றென்க. இங்ஙனம் அமைந்த தூல உடல்களால் உயிர்கள் வினைகளை ஆற்ற, அவ்வினைகளால் பின்னர் உடம்புகளும், அவ்வுடம்புகளால் வினைகளும் மாறிமாறித் தொடர்ச்சியாய் வந்துகொண்டிருக்கும். முத்திபெற்றாலன்றி முதற்கண் அமைந்த நுண்ணுடல் அழிவுருமல் படைப்புக்காலந் தொடங்கிச் சங்கார காலமளவும் (பேரொடுக்கக் காலம் வரை) நிலைபெற்றிருக்கும் என்பதும் ஈண்டு அறியத்தக்கதாகும். இதுகாறும் கூறியவாற்றுல் உடல்

முந்தியா? வினை முந்தியா? என்னும் கேள்விக்கு உடலே முந்தி என்னும் விடை பெறப்படுதலைக் காணலாம். இவ்விடை அமைந்த உமாபதி சிவாச்சாரியாரின் திருமொழி வருமாறு:—

"கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும்—உள்நாடிக்
கட்புலனுற் காணுர்தங் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்—முற்பால்

"தனுகரண மும்புவன முந்தந் தவற்றுன்
மனமுதலால் வந்த விகாரத்தால்—வினைஇரண்டும்
காட்டி யதனுற் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி."

(போற்றிப்பஃறொடை - வரி-10-17)

இங்ஙனம் "முற்பால் தனுகரணமும் தந்து" என உமாபதிசிவம் கூறியிருப்பதைச் சிவஞான முனிவர் சிவஞானபோதப் பேருரையில் எடுத்துக்காட்டும் பொழுது மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கு ஒன்றிற்கு அரியதோர் உரையைக் குறிப்பால் உணர்த்துகிறுர். இவ்வுரையே மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும் கேள்விக்கு விடையாக அமைகிறது. இனி அதனை ஆராய்வோம்.

திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான்,

"விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்."

(திருச்சதகம் - செய்யுள் - 96)

என அருளியிருக்கிறுர். "விச்சதின்றியே விளைவு செய்குவாய்' என்பதற்கு "வித்தே இல்லாமல் விளைவிப்பாய் அதாவது மூலம் இல்லாமலே ஒரு பொருளை உண்டாக்குவாய்" எனப்பொருள் கூறி, "எல்லாம் செய்யவல்லவ ஞதலால் இஃது இறைவனின் அகடிதகடநா சாமார்த்தியத்தை உணர்த்திற்று" எனச் சிலர் சமாதானம் கூறுவர். இவ்வுரை சற்காரியவாதம் கூறும் சைவ சித்தாந்தத்திற்குப் பொருந்தாது. "உள்ளதே தோன்றும்"

என்பது சற்காரிய வாதம். இல்லாதஒன்று தோன்ருது. ஆகவே மூலம் இல்லாமலே ஒரு பொருளை இறைவன் அகடிதகடநா சாமார்த்தியத்தால் உண்டாக்குவான் எனப்பொருள் கூறுதல் சைவ சித்தாந்தக் கொள்கைக்கு ஏற்றதன்று. அங்ஙனமாளுல் "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்னும் மணிவாசகப் பெருமான் திருவாக்குக்கு என்ன பொருள்? "இது முதலுற்பவம் ஆமாறுணர்த்திற்று" எனச் சிவஞான முனிவர் நுண்ணூர்வால் உரை காண்கின்ருர்.

முதலுற்பவத்தில் நாம் முன் கூறியவாறு இறைவன் நுண்ணுடற்கண் தோன்றும் உயிர்களின் மனோநிலைக்கு ஏற்பத் தூலவுடல்களை நல்குகின்ருன். அங்ஙனம் நல்கப்பட்ட தூல உடல்கள் பல என்றும் முன்னர்க் குறிப்பிட்டோம். அவற்றுள் ஒன்றே மரம் என்னும் தூலவுடல் என்பதைக் கூறவேண்டுவ தில்லை. எனவே மரமாகிய தூலவுடல் முதலுற்பவத்தில் வித் தின்றியே தோன்றுகிறது. அதன்பின் அதினின்றும் வித்தும், அவ்வித்தினின்றும் மரமும் மாறிமாறித் தொடர்ச்சியாய் வரும். இதனுல் மரமும், வித்துமாகிய காரண, காரியத் தொடர்ச்சி முதலுற்பவத்திற்குப் பின்னரே என்பது தெளிவாகும்.

"விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்பதற்கு, "இல்லாததை உண்டாக்குவாய்" என்று உரை செய்யாமல், என்றும் இருக்கின்ற பொருளாகிய மாயையினின்றும் படைக் கப்படும் சட உடல்களான மரம், வித்து என்னும் இவ்விரண்டில் முதலுற்பவத்தில் வித்தில்லாமல் மரமே முன்னர் இறைவனுல் படைக்கப்படுவதால், "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என மணிவாசகப் பெருமான் கூறியருளுகின்ருர் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் இயல்பாகக் கொள்ளுகின்ற தூலப்பொருளோடு, நாம் முன்னர் எடுத்துக் காட்டியவாறு முதலுற் பவத்தில் வினை இன்றியே, ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி, இறைவன் உடல்களைப் படைத்தளிக்கின்ற பெருங் கருணைத் திறம் நோக்கி இவ்வாறு கூறுகின்ருரென்னும் நுண் பொருளையும் கொள்ளுதல் வேண்டும். சிவஞான முனிவர் குறிப்பால் கூறும் இவ்வுரையை நாம் விரித்துப் பொருள் கொள் ளும்போது, "மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும்

கேள்விக்கு, "மரமே முந்தி" என்னும் விடை மணிவாசகப் பெருமான் திருவாக்காக அமைவது அறிந்து இன்புறத்தக்கதாகும்.

இக்கட்டுரையின் துவக்கத்தில் காட்டிய சிவஞான சித்தியார், "உடற் செயல் கன்மம்" என்னும் திருவிருத்தத்திற்குச் சைவ சித்தாந்தப் பேரறிஞர் திரு. பொ. முத்தைய பிள்ளை அவர்கள் உரை எழுதும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"வித்தும், மரமும் ஒன்றுக்கொன்று காரண, காரியமாக இருப்பினும் இறைவன் முதலாவதாக இரண்டி லொன்றைத்தான் உற்பத்தி செய்திருக்கவேண்டும். அது மரமாகவே இருக்கவேண்டும். இக்கருத்தைப்பற்றியே, "விச்சதின்றியே, விளைவு செய்குவாய்" என மணிவாசகப் பெருமான் அருளிச் செய்தனர். (சிவஞான சித்தியார் சுபக்கம் - முத்தைய பிள்ளை அவர்கள் உரை - பக்கம் - 140),

இங்ஙனம் எளியநடையில், "மரம் முந்தியா? வித்து முந்தியா?" என்னும் கேள்விக்கு "மரமே முந்தி" என்னும் சைவ சித்தாந்த விடையை எடுத்துக் கூறிய திரு. முத்தைய பிள்ளை அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டதாகும்.

---

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள்
கல்வி நிலையங்களின்

# புரவலர் தின விழா

வித்துவான்.

திரு. வே. சங்கரநாராயணன் அவர்கள், பி, ஏ.,

ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கல்வி நிலையங்களின் புரவலர் தின விழா 8–9–62-ல் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிக் கலையரங்கில், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இளவரசு வித்துவான் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் உயரிய தலைமையில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ இளவரசு சுவாமிகள் இந்நகருக்கு எழுந்தருளியதும், நேராக ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் திருமடத்துக்குச் சென்று வழிபாடு செய்தார்கள். பின்னர் அருள்நந்தி நகரில் அமைந்துள்ள கல்லூரிக் கட்டிடங்களைப் பார்வையிட்டருளினர்கள். அவ்வமயம் கல்லூரி ஆசிரியர்கள், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றனர்.

மாலை 5 மணிக்கு ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக் கலையரங்கில் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. இறைவணக்கப் பாடலுக்குப்பின் ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றின் சார்பில், நிர்வாகக் குழுத்தலைவர்களாகிய, திரு. S. கோமதிநாயகம் பிள்ளை அவர்கள், திரு. S. இராஜாங்கம் ஐயர் அவர்கள், திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் ஆகியோர் வரவேற்பிதழ்களைப் படித்தளித்தனர். பின்னர், துவக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், கல்லூரி முதல்வர் அவர்களும்,

ஆண்டறிக்கைகளைப் படித்தனர். உயர்நிலைப்பள்ளி ஆட்சிக் குழுவின் ஆண்டுக் கணக்கு விளக்கமும் செயலாளர் அவர்களால் படிக்கப் பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ இளவரசு சுவாமிகள் அவர்கள் தலைமைப் பேருரையாகிய அருளுரையைத் தீந்தமிழ் அமுத மழையென, எல்லோரும் நுகர்ந்தின்புறுமாறு நிகழ்த்தினார்கள். அவர்கள் பேச்சில் தென்தமிழ் நாட்டின் சீர்சால் பெருமை அனைத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் உலகன்னையாகிய உமையம்மையும் குன்றமெறிந்த குமரவேளும் தண்தமிழ்ச்சுவை கூட்டுணும் விருப்பால் அரசு வீற்றிருந்த சிறப்பும், சங்கப் புலவர் தமிழாராய்ந்த பெருமையும் பிற்காலத்தில் வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் பாலம் அமைத்தாற்போன்று திருநெறிப் பணி செய்து, பனசைத் திருமடமாம் காசிமடத்தின் மூலமுதல்வராகிய ஸ்ரீஆதி குமரகுருபர சுவாமிகளும், தருமையாதீனக் குருமுதல்வராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளும், துறைசையாதீனக் குலதெய்வமாகிய ஸ்ரீசிவஞான முனிவரும், இப்போது காசிமடத்தின் சிறப்பினை எண்டிசையும் பரப்பி வரும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் தோன்றியருளிய பெருமையும் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தனவே என்று குறிப்பிட்டருளினார்கள்.

இன்றைய விழாப்பெரு முனிவராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் புகழ்ச்சி விரும்பாப் புண்ணிய சீலர். ஆயினும் அவர்கள் அருள்நீழலில் வாழ்பவராகிய நாம், அவர்கள் பண்புநலன்களை நினைந்து போற்ற வேண்டிய கடப்பாடுடையவர்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் என்பையும் பிறர்க்குரிமையாக்கும் அன்புப் பண்பினர்; "அறத்திற்கே அன்புசார்பென்ப அறியார், மறத்திற்கும் அஃதே துணை" என்ற பொய்யா மொழிக்குப் புதுப் பொருள் கொள்ள இலக்கியமாகத் திகழும் பொற்பினர்; "திருவேறு; தெள்ளியராதலும் வேறு" என்பதற்கு மாருகத் திருவும், அதனை அறநெறிப்படுத்தும் தெளிவும் பெற்றுத் திகழ்பவர்; காட்சிக் கெளிமை, கடுஞ்சொல் இல்லாமை, தெரிந்து தெளிந்து வினையாளும் செயற்றிறம் ஆகிய நாடாளும் வேந்தர் இயல்புகள் அனைத்தும் குடி கொண்

டிலங்கும் தவவேந்தர்; என்பன போன்ற அரிய தன்மைகளை எல்லாம் விளங்க எடுத்துக் காட்டினுர்கள். "இதனை, இதனுல் இவன் முடிக்கும் என்ருய்ந்து, அதனை அவன்கண் விடல்" என்ப தற்கிணங்கத், தாம்நிறுவும் அறக்கட்டளைகளைகளைத் திறம்படச் செயலாற்றுதவற்கு இந்நகர் வழக்கறிஞரும், ஆதி குமரகுருபர சுவாமிகள் மரபினருமாகிய திரு. T. M. குமரகுருபரன்பிள்ளை B.A.,B.L. அவர்களைத் தேர்ந்தெடுத்திருப்பதைக் குறிப்பிட்டார்கள்.

இக் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் கற்பன கற்றுக் கலைநெறி நிற்கும் பண்பினராக வளரவும், ஆசிரியர்கள் மாணவர்க்கு எடுத்துக் காட்டாகத் திகழவும் அனைவரும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களைப் போல், குறள் நெறி வாழ்க்கை நடத்தி உயரவும் அறிவுரை கூறி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் 64-வது ஆண்டுப் பிறந்தநாள் விழாவாகிய இன்று அவர்கள் அருளால் நிறுவப் பெற்றுள்ள கல்லூரி, 64 கலைகளையும் வளர்க்கும் பண்ணையாக உயர்ந்தோங்கவும், உயர் நிலைப்பள்ளியும் துவக்கப்பள்ளியும் மேலும் பற்பல நற்பணிகளைச் செய்து திகழ வும் வாழ்த்தியருளிப் பேருரையை நிறைவு செய்தார்கள். பின்னர் மாணவர்க்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட கல்லூரி மாணவர் கள் இன்னிசை விருந்தளித்தனர். துவக்கப்பள்ளிச் சிறுமியர், நடனம் பாட்டு நிகழ்த்தினர். உயர்நிலைப் பள்ளி மாணவர் களால் "சிறுத்தொண்ட நாயனுர்" என்ற நாடகம் சிறப்பாக நடத்தப் பெற்றது.

உயர்நிலைப்பள்ளி மேலாளர் டாக்டர் திரு. S. வேங்கட சுப்பிரமணியம், அவர்கள் L. I. M. நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

# பித்துலகில் பெருமக்கள்

சித்தாந்தச் செல்வர்,
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தன் அவர்கள்,
திருவண்ணாமலை.

உலகிடையே வாழும் மக்களினம் பூண்டுள்ள பித்துகள் மிகப்பல. அவற்றுள், பணப்பித்து, பெண்பித்து, பதவிப்பித்து, படிப்பின்பித்து, என்பவை நாளும் நினைத்தற் குரியவை. எப் பொருளாயினும், அப்பொருளை அளவுபடப் பயன்படுத்துங்கால், நலம் பயப்பதாயமையும். அதை விடுத்து அளவுமீறி, எதைப் பயன்படுத்தினும், அதனுற் பெறும்பலன் தீமையேயாகும். "அளவிற்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சாம்" என்பது நம்மனோர் கண்ட உண்மை நெறி. மக்களுக்கு, வேண்டத்தகாத - மேற் குறிப்பிட்டுள்ள பித்துகள் பிடித்து விட்டால், அவர்கள் வாழ்க்கை பேயாட்டமாயமைகின்றது. நல்லவைபால் பித்துக் கொண்டால், என்றும் நலமே தோன்றும். எல்லாரும் ஒரு நேரத்தில் ஒரு பொருளின்பால் பித்து கொள்ளுதலோ, அன்றிப் பற்று கொள்ளுதலோ, இயலாத செயல். "ஒருவர் மனம்போல் இன்னெருவர் மனம் அமைவதில்லை" என்பது உளநூலாய்ந்த பெருமக்களின் உள்ளக்கிடை.

மனம் மாறுபடுவதுபோலச் செயலும் மாறுபடும். செயல் மாறுபடுவதுபோல, அதனுல் தோன்றும் செயல்களும் மாறு படுகின்றன. எனினும், எல்லாரும் ஒருபொருளின்பால் பித்தோ-பற்றோ வைப்பின், அதனுற் பெறும் பலன் தீயவை தோற்ருமல், ஒருபுடைத்தாய் நன்மையே பயப்பதாகும். அப்பொருள் எது? அதுதான் இறைவனும் சிவனெனும் பெம்மான். இப்பொருள் பற்றி எத்தகையோர் எதை யெண்ணினும், ஒத்த ஒரு முடிவுக் கும், பெருமைக்கும் வருவது திண்ணம். அங்ஙனமே, அவ் விறைவனும் பெருமானின் தன்மையை வெளிப்படுத்துவது பெரு மக்கள் அவனைப்பற்றி, மனமார நினைந்து, வாயாரப் பேசிக்

கையார வெழுதியமைத்துள்ள தத்துவங்களே! (Philosophy) தத்துவ வாழ்க்கையின் தன்மையை யோர்ந்தவர்கள் என்றும் வாழ்க்கையில் நன்னிலே பெற்ருர்களே தவிர, தவிர்ந்தும் தீநிலே யுறவில்லே. இவ்வழியிற் செல்லலே, ஏற்புடைத்தன வெண்ணி, அவ்வழியிற் சென்றவர்களே இன்றைய பித்தவுலகம் வெறியர்க ளெனப்பறை சாற்றுகின்றது. காரணம் "கண்ணிற் கண்டதே காட்சி, கொண்டதே கோலம்", என வெண்ணிச் சிந்திக்காது மாயுந்தன்மை மக்களிடையே யமைந்ததினுல்தான். சிந்தனேக் கண்கொண்டு, நாம்யார்? நம்மைப் படைத்தாட்டு விக்கின்ற வன் யார்? அவனுல் பெறும் நன்மைகளெவை? என்பவற்றை நினேந்தால், வாழ்க்கையில் ஈடேற்றங் காண்பது தெளிவென் பதை ஞானச் செம்மல்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

பித்தவுலகுதான் நாம் வாழ்வது என்று கண்டவர்கள் பெருமக்கள். அவ்வுலகில் வாழும் மக்கள் பித்தர்களா? அல்லது அவ்வுலகைப் படைத்த இறைவன் பித்தனு? அல்லது அவ்விறை வனேப் பாடியவர்கள் பித்தர்களா? என்பன போன்ற பல ஐய வினுக்கள் அகத்தே யெழுந்து அலேப்பை உண்டாக்கும். இத்த கைய கேள்விகள் எழுதலும் இயற்கையே! பித்துக்கொண்ட மக்கள், தங்களேப் படைத்த இறைவனேப் பித்தனென்றழைக் கின்றனர். பலவண்ணக் கண்ணுடிகளேயிட்டு நோக்கு வார்க்கு, நோக்கும் பொருட்கள், அவ்வந்நிறத்தனவாகவே அமை கின்றன. எந்த நினேப்பில் நாம் ஒரு பொருளே நோக்குகின் ரேமோ, அந்த நினேப்பில் அப்பொருளும் உண்மையைத் தோற்றுவ தொருதலே. மரத்தால் செய்யப் பெற்ற மஞ்ஞையை நோக்குங்கால் அம்மரத்தின் நினேவு தோன்றி, அது எம்மரத் தால் செய்யப் பெற்றதென்ற சிந்தனே தோன்ருமல், அம்மஞ் ஞையின் தோகை யழகும். அதன் கால்களின் வளேவழகும், அதன் மேனியழகும் காண்பதுதான் அறிவுடையோர் செயல்!. அங்ஙனமே இறைவனும் பெருமானே - நோக்குங்கால், பெரு மானின் திருமேனி எவ்வெவெற்ருல் செய்தமைக்கப் பெற்றிருக் கின்ற தென்றதன்மைபால் சிந்தைவையாமல், பெருமானியற்றி யருளிய திருவிளேயாடல்களின்பால், மனத்தைப் பொருத்தினுல், அவனேப்பற்றிய தத்துவ நினேவுகள் உள்ளத்தே யியல்பாய்த் தோன்றும். இங்ஙனம் நோக்க வேண்டியதுதான் மக்கள்பால்

நிலவ வேண்டிய நிலே. அதை விடுத்து வேற்று வழியில் மனதைச் செலுத்தல் நேர்மையதன்று. மக்கள் நன்னேக்குப் பூண்டு வாழ்வதற்காகவே தண்தமிழகத்தில், சிறப்புக்களால் மீதூர்ந்த அடியார்களும் நாயன்மார்களும் தோன்றி நல்ல வற்றையருளியுள்ளனர்.

அருமை, பெருமை, வாய்ந்த அடியார்களும், இவ்வுலகைப் பித்த வுலகென்றழைத்து, இவ்வுலகத்தை யாக்கி யருளிய பெருமானேயும் பித்தனென்றழைத்தனர். அதுவுமன்றி, இப்பித்த வுலகின் கண்தோன்றி, இறையருட் பேற்றையே, பெருமைக்கு உகந்ததாக எண்ணிய ஆளுடைய அடிகளும், தன்னேப்பற்றிப் பேசும் பல தெய்வீகப் பாடல்களில், பித்தனென்றே யழைத்துள்ளார். இதற்குக் காரணம், இவ்வுலக மாயங்களில் சிக்குண்டு, தவித்து, இறையருளில் தோய வைத்தற்குச் சற்குருவானவர் கிடைக்கப் பெருது, மனங் கலங்கித் தடுமாற்றத்திலாழ்ந்து, தனிப் பேரின்பம் பெறவில்லேயே, என்றதனுல் அத்தகைய ஞானப் பெருமகனுரும் நைந்து, நைந்துருகித் தன்னேப் பித்தனென்றும், தன்னேப் படைத்தவனேப் பித்தனென்றும், அவனுல் படைக்கப்பெற்ற வுலகமும் பித்துடையது என்றும் பலவாறு பாடி யருளியுள்ளார். இத்தகைய பெருமக்கள் கூறும் கருத்துக்களே நாமும் சிந்தைகொள்வோம்.

ஒருநாள் கைலேயம்பதியில், ஆலால சுந்தரர் எம்பெருனுக்குத் தொண்டு நிகழ்த்தப் பூக்கொய்தகாலே, ஆங்குற்ற அனிந்திதை, கமலினி என்பவர்கள்பால் காமக் கண்ணேட்டங் கொண்டதன் விளேவால், இம்மாநிலத்தில் மானிடவுருத் தாங்கி வாழவேண்டுமென்று பெருமான் கட்டளேயிட, அதைக்கேட்ட சுந்தரர் வருத்தம் பெருகி நிற்க, இதைக் கண்ட பெருமான், ஆலால சுந்தரரைத் தடுத்தாட் கொள்வதாகக் கட்டளே பிறப்பித்தார். அங்ஙனமே ஆலால சுந்தரரும் நடுநாட்டில் பிறந்து, நம்பியாரூரரெனப் பெயர் பெற்று வாழலானுர். நம்பியாரூரர் உற்றவயது வந்து திருமணக் கோலங்கொண்ட சமயத்தில், எம்பெருமான், "நாவலூரன் தனக்கடிமை" என்றெழுதி யிருந்த வோலேயைக் காட்ட, அவ்வோலேயைக் கிழித்தெறிந்தார். மனம் வெகுண்ட எம்பெருமான், படியோலே கிழிக்கப்பெறினும் மூல

வோலை தம்பால் உளதெனக் கூறி, வழக்கு முடிந்த பின்னரே மணம் நிகழ்த்திக் கொள்ள வேண்டும் என்று கூறி, தங்களிரு வரின் இடையில் உள்ள வழக்கை முடிக்கத் திருவெண்ணெய் நல்லூர் அழைத்துச் சென்று, அங்குள்ள அறவோர்களின் நியாய மன்றத்தில், முடிவு கோரினர். அவர்கள் நியாயப்படி "ஆரூரன் கிழவேதியர்க் கடிமை" என்ற வுண்மையை நிலை நாட்டினர்கள். நம்பியாரூரர் முன்னமே சினந்து, மணம் முறி கின்ற தென்கிற சிந்தனையால் "பித்தனே" என்று கிழவேதி யரை யழைத்தார். அவையோர் வேதியரை நோக்கி அவர்வாழிட மெதுவெனக் கேட்க, அவரும், திருவருட்டுறைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று, மறைந்தருளினர். உடனே நம்பியாரூரக்குப் பண்டைய நினைவுகள் தோன்றப் பெருமானும் விடைமேலமர்ந்து காட்சி யளித்தருளினர். உடனே ஆரூரர்க்குப் பெருமானைப் பாடவேண்டும் என்ற சிந்தை தோன்ற "பித்தா" என்ற சொல் வானின் வழியாய்க் கேட்டது. இதைக் கேட்ட ஆரூரரும் சிவபெருமானைப் பின்வருமாறு பாடலுற்றார்.

"பித்தாபிறை சூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டு
அத்தாவுனக் காளாயினியல்லே னெனலாமே." [றையுள்

(திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகம்.)

ஆரூடைய நம்பி இறைவனைப் பித்தனென்றழைத்தார். அவர் தன்னைப் பித்தனென்று சொல்லவில்லை. இவருக்குப் பின்னர் விளங்கிய ஆளுடையவடிகள் எனப் பெயர் பெறும் மாணிக்கவாசகர், இறைவனைப் பித்தனென்கின்றார். தன்னையும் பித்திலாழ்ந்து, தலைதடுமாறும் நிலை பெற்றதாகக் கூறுகிறார். தான் வாழுதற்கிடமாயமைந்த இவ்வுலகையும் பித்தவுலகென் கின்றார்.

மானிடப் பிறவி யிந்நிலவுலகத்தின் கண் பெறுதற்கரிய தொன்றும். இப்பிறவியின் பயன்யாது? வெற்றின்பங்களை நுகர்வதற்காகவோ? அல்ல! பின் எற்றுக்கு? நல்ல புண்ணிய வுலகில் தோன்றும் மலர்கள், மணத்தைக் தருகின்றன. அவை

நன்மலர்கள். அங்ஙனமே இம்மண்ணுலகத்தில் தோன்றும் மக்களின்பால் பற்றில்லாப் பரம்பொருளின் செம்மை மணம் கமழ வேண்டும், இஃதேயியற்கை! இதற்குமாருன நிலே பொருந் தாததொன்ரும். இங்ஙனம் உள்ள அரும்பெரும் பரம்பொருளேப் பாராமல், பெற்றபயன் எதுவாயினும், அதை நுகரும் பான்மை பூண்ட பித்தர்களின் சொற்களில் அலேப்புண்டு தெளியாதே நின்றிட்ட என்னேயும், ஆண்டு, அத்தன் அடியவர்களின் திருக் கூட்டத்தில் சேர்த்த அதிசயம் பெரியதென்கிருர் மணிவாசகப் பெருமான்.

உற்ற வாக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்றலாவதோர் நிலேயிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே,
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர் சொற்றெளியாமே
அத்தனுண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

*– திருவாசகம்-அதிசயப்பத்து-9.*

பித்த வுலகிடைவாழ், மக்களேப் பித்தர்களெனப் பாடிய அவர், இறைவனேயும் பித்தவடிவு கொண்டவனே என இயம்பு கின்ருர். இதனுலும் சுந்தரர் வரலாறு ஓராற்ருன் விளக்கம் பெறுகின்றது. யானேயை உரித்துப் போர்த்தருளும் பெருந் துறையான், பித்தவடிவு தாங்கினுன்; பிள்ளே வடிவுந் தாங் கினுன். அத்தகைய முத்திக்கு வித்தாக விளங்கும் உத்தர கோசமங்கை வள்ளல் புத்தியிற் புகுந்தான் என்று இயம்பு கின்ருர், மணிவாசகப் பெருமான்,

அத்தியுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்,
பித்தவடிவு கொண்டிவ் வுலகிற் பிள்ளேயுமாம்
முத்திமுழு முதலுத்திர கோசமங்கை வள்ளல்
புத்திபுகுந்த வாபூவல்லி கொய்யாமோ.

*–திருவாசகம்-திருப்பூவல்லி-19,*

புத்தன் புரந்தராதியர் அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை யம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ!.

–திருவா-திருத்தெள்ளேணம்-17.

பழைய அடியவர்களின் திருக்கூட்டத்தின்கண் கலந்து, பெருமானின் திருவருள்பெறும் உபாயமதை அறியாமல் இறந்து போய்ப்பாழ் நரகிடை விழ்தலை விரும்புதல் உடையேனை உலகவர் பித்தனென்று பகர்கின்றனர். அங்ஙனம் தீ நெறிப் பட்டுழல்வேனை, அத்தனுண்டு அடியவர்களின் திருக்கூட்டத்தில் என்னையும் சேர்த்தான்.

பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர்
காரணமிது கேளீர்
ஒத்துச் சென்றதன் திருவருட் கூடிடும்
உபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற்
கொருப்படு கின்றேனை
அத்த னுண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே!.

(திருவா-அதிசயப்பத்து-4)

(வளரும்)

# "சாகசமே வாழ்க்கை"

சோதனை விமானி

(விங் கமாண்டர் ஆர். எல். சூரி.)

---

பறவைகளும் மூடர்களும் தான் பறக்க முடியும் என்று விமானப் படையில் வேடிக்கையாக, கிண்டலாகப் பேசிக்கொள் வதுண்டு. இந்தக் காலத்திற்கு இது உண்மை என்று சொல்வ தற்கில்லை. இன்று உலகப் புகழ்பெற்ற பல பெரியவர்கள், நம்முடைய மரியாதைக்குரிய பெரியவர்கள் பலர், அன்றாடக் காரியங்களை முன்னிட்டு வானில் பறக்கிறார்கள் — அதாவது விமானத்தில் பிரயாணம் செய்கிறார்கள். பறக்கத் துணிபவர்கள் மூடர்கள் என்பது ஒரு காலத்தில் உண்மையாக இருந்ததோ என்னவோ. வானில் மனிதன் பறக்காத காலத்தில், பறக்க ஆராய்ச்சி நடந்து வந்த காலத்தில் அது உண்மையாக இருந் திருக்கலாம். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. நாம் பிரமிக்கும் அளவுக்கு பறக்கும் கலை இன்று முன்னேறியுள்ளது.

ஒரு விமானம் நன்கு பறக்கிறதா என்று முதல் முதலாக வானத்திலேயே பறந்து பரிசோதனை செய்யும் பழக்கம் எப் பொழுது ஆரம்பமாயிற்று? ரைட் சகோதரர்களில் ஒருவரான ஆர்வில் ரைட் 1903ம் ஆண்டு டிசம்பர் மாதம் காற்றைவிட கனமான தம் விமானத்தில் முதல் முதலாகப் பறந்தாரே, அன்றுதான். தம்மால் பறக்க முடியுமா முடியாதா என்பதே அவருக்குக் கவலையாக இருந்தது. ஆனால் அதைவிட, பூமியை விட்டு வானில் ஏறியதும் தம்முடைய விமானம் எப்படியெல்லாம் நடந்து கொள்ளும் என்ற கவலைதான் அவருக்குப் பெரிதாக இருந்தது. இந்த உலகத்தில் முதல் டெஸ்ட் பைலட் அவர் தான். சகோதரர் வில்பர் ரைட்டின் ஒத்துழைப்போடு அவர்

---

*மேலே காணும் கட்டுரை மதராஸ் அகில இந்தியா வானொலி நிலையத் தாரின் அன்பனுமதி பெற்று வெளியிடப்பட்டது.*

தன் விமானத்தை அமைத்து உருவாக்கினர். அதற்கு அவரே டெஸ்ட் பைலட் ஆகவும் விளங்கினர்.

இந்தக் காலத்து விமானம் மிகச் சிக்கலான அமைப்புக் கொண்டது. ஆனாலும் நம்பக் கூடியது. இதற்குச் சில காரணங்கள் உண்டு. 50 ஆண்டுகட்கு முன்னுல் விமானம் என்று எதையோ அமைத்து, பிறகு ஏறிப் பறந்து பார்த்துத்தான் சரியாயிருக்கிறதா என்று கண்டுபிடிப்பார்கள். ஆனல் இன்று அப்படியில்லை. என்ஜின், விமான அமைப்பு-கட்டுதல் இரண்டிலும் நுணுக்கமான, வியக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. அதோடு விமானம் கட்டப்படும் ஒவ்வொரு கட்டத்திலும், பல சோதனைகள் செய்து பார்க்கிருர்கள். இந்த வேலைகளில் டெஸ்ட் பைலட் செய்யவேண்டிய கடமைகள் பல உண்டு. அப்படிப் பார்க்கும் பொழுது சோதனை விமானியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒருவர் ப்ரோட்டோ டைப் டெஸ்ட் விமானி, இன்னெருவர் ப்ரொடக்ஷன் டெஸ்ட் விமானி.

பிரோட்டோடைப் டெஸ்ட் விமானி, விமானம் கட்டி உருவாகும் ஒவ்வொரு கட்டத்திலும் கண்காணித்து, அது எப்படியெல்லாம் அமையவேண்டும் என யோசனை சொல்கிருர். விமானம் சரியாக உருவாகி, உருப்படியான முறையில் பயன்படுமாறு அமைய உதவி செய்கிருர் அவர்.

அவருடைய வேலை முடிந்த பிறகு, ப்ரொடக்ஷன் டெஸ்ட் விமானியின் வேலை தொடங்குகிறது. ஒரு புதுமாதிரி விமானம், அமைப்பு, கட்டுக்கோப்பு முதலியவற்றில் எவ்வளவு திருப்திகரமாகயிருந்தாலும் வியாபார அளவில் பெரும் அளவுக்கு உற்பத்தி செய்யவேண்டும் என்றுல், ஒவ்வொன்றையும் பறக்க வைத்துச் சோதனை செய்துதான் ஆகவேண்டும். எவ்வளவு திட்டவட்டமாகச் செய்தாலும், மனிதன் செய்தது தானே அது! ஏதாவது குறைகள் இருந்தால்?

விமானத் தொழிற்சாலையில் விமானப்பகுதிகள் மிக மிக நுணுக்கமாக, கச்சிதமாகச் செய்யப்படுகின்றன. அதற்காக பல விசேஷ சாதனங்களும் உண்டு. ஏதாவது சிறு தவறுகள்

கூட ஏற்படாமல் இருக்க, சர்க்கார் கண்காணிப்புக் குழு ஒன்று விமானத்தை நன்ருகச் சோதித்துப் பார்த்து, இது வானில் பறக்கலாம் என்று ஒரு சர்டிபிகேட் தருகிறது. ஆனுல் இவ்வளவு ஜாக்ரதைக்குப் பிறகு கூட, ஒரு விமானம் எதிர் பார்த்தவாறு இயங்காமலிருப்பதும் உண்டு. மோட்டார் கார் செய்யும் பொழுது ரொம்ப ரொம்ப கவனமாகத்தான் செய் கிருர்கள். ஆனுல் சில சமயம் சாலையோரத்தில் ஒரு காரின் முகப்புத்திறந்து, அங்கு ஒருவர் பழுதுபார்ப்பதை நாம் கண் டிருக்கிரேும். மோட்டாரை இப்படிப் பழுது பார்க்கமுடியும். ஆனுல், விமானத்தை எங்கே பழுதுபார்ப்பது? வானத்தில் சாலை ஏது? ஓரமேது? ஆகவேதான் ஒரு விமானத்தை பொதுமக்களோ மற்றவர்களோ ஏறுமுன் முதலில் வானத்தில் பறக்கவிட்டுச் சோதனை செய்தாக வேண்டும்.

இந்த வேலையைச் செய்வதற் கென்றே தனி விமானிகள் இருக்கின்ருர்கள். இதற்கு நல்ல அனுபவம், முதிர்ச்சி, பயிற்சி, ஆபத்துக்களைக் கண்டு அஞ்சாத துணிச்சல், அபாயகரமான சோதனைகள் செய்யும் நெஞ்சுரம் எல்லாம் தேவை. வெகுகாலம் பறந்து பறந்து அனுபவம் உள்ளவர்களைத்தான் இந்த வேலைக்கு தேர்ந்து எடுக்க வேண்டும். தேர்ந்தெடுத்த பிறகு சில பிரத் யேக ஸ்தாபனங்களில் சோதனை விமானியாகும் பயிற்சியை அவர்களுக்கு அளிக்கிருர்கள்.

அபாயகரமான சோதனைகள் செய்யும் நெஞ்சுரம் வேண் டும் என்று சொல்லும் பொழுது, சோதனை விமானி ஒவ்வொரு வருக்கும் மயிர்கூச்செறியும் அனுபவம் ஒன்றிரண்டாவது கட் டாயம் ஏற்பட்டிருக்கும். எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றைச் சொல்கிறேன்.

நான் அப்பொழுது இங்கிலாந்தில் இருந்தேன். பத்து வருஷத்துக்கு முன்ஞல் நடந்தது இந்த சம்பவம். 1952-ம் ஆண்டு அக்டோபர் மாதம். "வெனம்" என்று அழைக்கப்படும் ஒரு ஜெட் விமானம் உண்டு. அதனுடைய பறக்கும் ஆற்றல் என்ன? என்று மதிப்பிடுவதற்காக என்னை இங்கிலாந்தில் உள்ள ஹாட்பில்ட் என்ற இடத்திற்கு அனுப்பியிருந்தார்கள்.

பிரான்ஸ் நாட்டில் சில விமானங்களை, பறந்து சோதனை செய்து விட்டு இங்கிலாந்துக்குப் போனேன் நான். அன்று வானம் தெளிவாக, இதமாக இருந்தது. இங்கிலாந்தில் இந்த மாதிரி வானம் தெளிவாக இருப்பது மிகவும் அபூர்வம். முக்கால்வாசி நாள் மழையும் தூற்றலும் மூடுபனியுமாக இருக்கும். ஆனால் இன்றோ ரொம்ப சுகமாக இருந்தது. "வெனம்" என்ற விமானத்தில் ஏறி, என்ஜினை முடுக்கி, தரையைவிட்டுக் கிளம்பி பறக்கத் தொடங்கினேன். உயர உயரப் போய் ஏறக்குறைய ஏழரை மைல் உயரத்திற்குப் போனேன். கீழே, அதாவது ஏழரை மைலுக்குக் கீழே, இங்கிலாந்தின் நாட்டுப் புறங்கள் வயலும் பச்சையுமாகத் தெரிந்தன. ஏழரை மைல் உயரத்தில் எப்படியிருக்கும்? ஒரே அமைதி! என்ஜினுடைய லேசான 'பர்ர்' என்ற ஓசையைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. என் எதிரே இருந்த கருவிகள், மீட்டர்கள் எல்லாம் நன்றாக இயங்கிக் கொண்டிருந்தன. இந்த நிமிஷம் வரையில் ஒன்றும் தகராறில்லை. எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்று மகிழ்ந்தவாறு பறந்தேன். பத்து நிமிஷம் பறந்த பிறகு ஒரு சோதனை செய்ய என்னைத் தயார் செய்து கொண்டேன். ஒவ்வொரு விமானமும் அதிக பட்சம் இத்தனை வேகத்தில் பறக்க வேண்டும் என ஒரு அளவு உண்டு. அந்த அதிக பட்ச வேகத்தில் இந்த விமானம் எப்படியெல்லாம் நடந்து கொள்ளும் என்று சோதிப்பது தான் என் எண்ணம். இந்த 'வெனம்' விமானத்தின் அதிக பட்ச வேகம் ஏறக்குறைய மணிக்கு 550 மைல். அவ்வளவு வேகத்தை அடையும் பொழுது இது எப்படிப் பறக்கும் என்ன செய்யும், என்று நான் காணவேண்டும்............மேலே கதையைச் சொல்லுமுன் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். இந்தக் காலத்தில் ஜெட் விமானங்களில் ஒரு ஏற்பாடு உண்டு. அது ஒரு கட்டாயமான ஏற்பாடு. விமானம் அதிக பட்சம் எவ்வளவு வேகம் பறக்குமோ அந்த வேகத்தை அடைய 15, 20 மைல் இருக்கும் பொழுதே விமானம் ஒரு தடவை வேகமாக அதிர்ந்து குலுக்கிப்போடும். அந்தக் குலுக்கல் வந்ததுமே, "சரி இன்னும் மணிக்கு 20 மைல் வேகம்தான் அதிகமாகப் பறக்கலாம், அதற்கும் மீறிப் போனால் ஆபத்து! விமானம் ஆகாயத்திலேயே வெடித்து விடும்" என்று எச்சரிக்கை செய்வதாக

அர்த்தம். நான் சென்ற விமானத்தில் அதிகபட்ச வேகம் மணிக்கு 550 மைல். ஆகவே மணிக்கு 530 மைல் வேகம் வந்ததுமே ஒரு தடவை குலுக்கிப் போடவேண்டும். எல்லா ஜெட் விமானங்களிலும் இந்த மாதிரி ஒரு எச்சரிக்கை ஏற்பாடு செய்திருப்பார்கள். ஏழரை மைல் உயரம் போனதும் நான் விர்ரென்று "டைவ்" அடிக்க ஆரம்பித்தேன். கீழே பாய்ந்தேன். விறு விறுவென்று வேகத்தை அதிகரித்துக் கொண்டே போனேன் எனக்கு முன்னால் வேகம் காட்டும் கருவியில் முள் நகர்ந்து· கொண்டேயிருந்தது. 400, 410, 420, 430, 460, 500, 510, 520, 530........ மணிக்கு இப்போது 530 மைல் வேகத்தில் பறக்கிறது. விமானம்! ஆனால் என்ன விந்தை! எச்சரிக்கை ஒன்றுமே இல்லை. விமானம் அதிரவில்லை. சரி இன்னும் அதிகபட்சம் வேகம் வரவில்லை போலிருக்கிறது என்று வேகத்தை இன்னும் அதிகரித்தேன். ஒன்றும் நேரவில்லை. சிறிது நேரமாயிற்று. திடீர் என்று கண்கொட்டுகிற நேரத்தில் என் நிதானம் போய்விட்டது. தூக்கிவாரிப்போட்டது. விமானம் அங்கும் இங்கும் ஊசலாடிற்று திரும்பிற்று முறுக்கிக்கொண்டது. இப்படியும் அப்படியுமாக தொட்டிலாடிற்று. எனக்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை கருவிகளை என்னென்னவோ செய்து பார்த்தேன். விமானம் அடங்கும் வழியாக இல்லை. அது மட்டும் இல்லை. விமானம், உயரம் இழந்து கொண்டே இருந்தது. ஒரு சில விநாடிகளுக்குள்ளேயே ஏழரை மைல் உயரத்தில் இருந்த விமானம் விர்ரென்று மூன்று மைல் உயரத்திற்கு இறங்கி விட்டது. இந்த விநாடிகளை நான் மறக்கவே முடியாது. காலம் இடம், திக்கு திசை ஒன்றுமே எனக்கில்லை. அசைவதாகக் கூட தோன்றவில்லை. அப்படியே ஒரு பிரமை-ஒரு மயக்கம். ஏன் உண்மையாகவே சிறிது நேரம் எனக்கு சுயநினைவே இல்லை. எதிரே வானம்தான். அத்தனை உயரத்தில் ஸர்க்கஸில் ஆடுகிற மாதிரி என் விமானம் குட்டிக்கரணம் போட்டுக்கொண்டிருந்தது. ஆனால் இந்த ஸர்க்கஸைப் பார்க்கத்தான் ஆட்கள் யாரும் இல்லை. வானத்தில் எங்கோ தன்னந்தனியாக உயரத்தில் செய்து கொண்டிருந்த இந்த வித்தையை, கடவுள் ஒருவர்தான் பார்த்துக்கொண்டிருந்தார். ஸர்க்கஸ் கூடாரத்தில் அந்தரத்தில் வித்தை செய்யும் பொழுது கீழே உறுதியாக ஒரு வலையைக்

கட்டியிருப்பார்கள், விழுந்தால் அடி படாமல் காப்பாற்ற. ஆனால் இந்த விமானம் ஆகாயத்தில் நடத்தும் ஸர்க்கஸுக்கு வலை ஏது.

விமானம் நிச்சயமாக வெடித்துவிடும், நம் வாழ்க்கை முடிந்துவிடப் போகிறது என்ற பயத்தில் எதையாவது செய்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று நான் என் முன்னுள்ள கருவிகளை முடுக்கிக்கொண்டு இருந்தேன். உயிரில் நம்பிக்கை போய்விட்டது; பிழைப்போமோ, சாவோமோ - இரண்டும் தெரியாது. இரண்டும் கெட்டான் நிலையில் என் ஆத்மா தத்தளித்தது. அந்த ஒரு சிறு கணத்தில் திடீர் என்று ஒரு அதிசயம் நிகழ்ந்தது. விமானம் சட்டென்று அதிர்ச்சி நின்று அமைதி அடைந்தது போலிருந்தது. அதைப் பிடித்து ஆட்டின ஆட்டம் ஒய்ந்தது, வெறியாட்டம் நின்றது. சட்டென்று என்ஜின் மீண்டும் எனக்கு வசமாயிற்று. பிறகுதான் எனக்குக்கூட சுயநினைவு, நிதானம் எல்லாம் வந்தன. என் பிரமை மயக்கம், அதிர்ச்சி எல்லாம் தெளிந்து நான் நிதானம் அடைந்தபோது நான் ஒரேயடியாக இரைத்துக்கொண்டிருப்பதும், என் உடல் ஏதோவலியில் முறிபட்டு நடுங்குவதும் எனக்கே தெரிந்தன. கொஞ்சம் கொஞ்சமாக என் புத்தி புலன்கள் எல்லாம் நல்ல நிலைக்கு வந்து சரியாக வேலைசெய்ய ஆரம்பித்தன. இனிமேல் சோதனை ஒன்றும் வேண்டாம், பேசாமல் கீழே இறங்கி விடுவோம் என்று தரையில் இறங்கி விமானத்தை ஓட்டி நிறுத்தினேன். என்ஜினீர்கள், இன்னும் மற்ற சிப்பந்திகள் யாவரும் எனக்காகக் காத்துக்கொண்டு நின்றார்கள். நான் விமானத்திலிருந்து கீழே இறங்கியதும், "என்னையா; வானத்திலேயே குளித்தீரா?" என்றுகத்திக்கொண்டே என்ஜினீர் என்னை வரவேற்றார். நான் என் உடலைப் பார்த்தேன். ஆமாம்! என் சட்டை, கால் சட்டை எல்லாம் வேர்வையால் தொப்பலாக நனைந்திருந்தன. அன்று இரவு படுக்கையில் படுத்திருந்த போது காலையில் விமானத்தில் நடந்ததெல்லாம் என் கண்முன் ஓடின. தேவர்கள் அடி எடுத்து வைக்க அஞ்சும் இடத்தில் முட்டாள்கள்தான் விரைவார்கள் என்ற முதுமொழியை முணு முணுத்துக் கொண்டே இருந்தேன். இளங்கன்று பயமறியாது என்று சொல்வார்களே, அந்த மாதிரி ஒரு பழமொழி. அந்த

வெனம் விமானத்தில் அதிக பட்ச வேகத்திற்கு முன்னுல் எச்சரிக்கை செய்யும் அமைப்பு கிடையாது என்று நான் கீழே வந்த பிறகுதான் சொன்னுர்கள். முன்னுலேயே நான் கேட்டுத் தெரிந்துக் கொண்டிருக்கக் கூடாதா?

என்னதான் முன்னுல் தெரிந்து கொண்டாலும் எதிர்பாராத அனுபவம் ஏற்படாமல் போகாது. மனிதன் செய்து செய்துதான் எதையும் கற்றுக் கொள்ள வேண்டும். கரையிலிருந்தே நீந்தக் கற்றுக்கொள்ள முடியுமோ? அனுபவப் பட்டால்தான் எதிலும் தேர்ச்சி அடைய முடியும். பயிற்சி பயிற்சி என்று பயிற்சிக் கூடங்களில் எத்தனைதான் பயிற்சி அளித்தாலும், செய்து பார்த்தால்தான் அனுபவம் கிடைக்கும். இது விஞ்ஞானம் வேகமாக வளரும் காலம். அந்த வளர்ச்சிக்கு முடிவோ, எல்லையோ கிடையாது. விமானத்தில் பறக்கும் கலையிலும் இன்னும் எத்தனையோ புதுமைகள் தோன்ற விருக்கின்றன. அனுபவங்கள் சேரச்சேர என்னைப்போன்ற ஒரு சோதனை விமானியும் ஏதாவது புதிதாகக் கண்டுபிடித்து, ஒரு புதிய விஞ்ஞானத் துறையையே தோற்றுவிக்கக் கூடும்.

---

# பாட்டியல்

மதுரகவி மரபினர்,
திரு. T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர் அவர்கள்,
மெயின்ரோடு, வாளாடி P. O. திருச்சிராப்பள்ளி.

[மலர் 13, இதழ் 9-ன் தொடர்ச்சி]

## புட்பொருத்தம் 7.

தானப் பொருத்தத்திகண் தேர்ந்தெடுத்த எழுத்துக்களைக் கொண்டே புட்பொருத்தம் அமைக்க வேண்டுமாகையான் ஏழாவதாகப் புட்பொருத்தம் புகலலுற்ரும்.

### (புட்களின் விவரம்)

ஐவகைக் குறிலும் அகரமுதலாக
வல்லூருந்தை வலியன் குருகே
மெல்லியல் மயிலென விளம்பினர் இவற்றின்
பொருத்தமும் விருத்தமும் பகையும் பலனும்
விரித்தினி தெண்ணி மேவினர் கொளலே. —பன்னிருபாட்டியல்.

(இ - பொ) ஐவகைக் குற்றெழுத்துக்களும் அகரம் வல்லூறு என்றும், இகரம் ஆந்தை யென்றும், உகரம் வலியன் என்றும், எகரம் கோழி யென்றும், ஒகரம் மயில் என்றும் ஐந்து புட்களாகச் சோதிட நூற்கண் புலவர்புகன்றனர். இப்புட்களின் பொருந்தம், விருத்தம் நட்பு, பகைஎன்னும் இவைகளைச் சோதிட நூற்கண் விரிவாக ஆராய்ந்து இனிதான நட்புக்குரிய புள்ளின் எழுத்தைப் பாட்டுடைத் தலைவன் மீதுபாடும் பாமாலையின் முதன் மொழியின் முன்னெழுத்தாக வைக்கப் பாட்டியலார் விரும்பினர். இக்கருத்தைப் பாவலர் அனைவரும் கொள்ளக் கடவர் என்பதாம்.

வலியன் - காகம். குருகு - கோழி.

விரித்து இனிதெண்ணி மேவினர் என்றதனுன் அப்புட்களின் பொருத்தங்களைக் கூறும் சோதிடக்கலையின் ஓர் பிரிவாகிய புட்களின் இயலைக் கற்று ஆய்ந்து இனிதான நட்புப் புள்ளுக்குரிய எழுத்தை முதன் மொழியின் முன்னெழுத்தாக அமைத்தல் வேண்டுமெனப் பெற்றும்.

'புள்' என்பது பட்சி. ஈண்டு ஐவகைப் பட்சிகளைக் கூறுதலான், இவை பஞ்சபட்சி ஆயிற்று. ஆகையான் இப்பஞ்சபட்சி இயலை விரித்து இனிதெண்ணி மேவினர் எனக் கூறப்பட்டது. பொருத்தத்தால் பலனும், விருத்தத்தால் பகையுமாம்.

ஈண்டு ஐவகைப்புட்களைப்புகன்ற பாட்டியலார் அவைகளின் பொருத்தம், விருத்தம் பகை, பலன் என்னும் இவைகளை இத் தன்மைத் தாமென விளக்கிக் காட்டாத காரணம் என்னை? யெனின், இயம்புதும்.

பண்டை நாள் வாழ்ந்த ஆசிரியப் பெருமக்கள் தம்மாணுக்கர்கட்கு மொழிக்கல்வி கற்பிக்கும் ஞான்றே சோதிடக்கலையையும், சமயப் பற்றையும் உடன் கற்பித்து வந்தமையான் அஞ்ஞான்று கற்றுர் அனைவரும் சோதிடக்கலை அறிந்தவரேயாம்.

மற்றும் சோதிடத் துவக்கச்சுவடி கற்றுரும் பஞ்ச பட்சிகளின் பொருத்தம், விருத்தம், பகை, பலன் என்னும் இவைகளை நன்கு அறிவர். ஆகையான் பாட்டியலார் அவைகளின் விளக்கம் விளம்பாது இனிது எண்ணி மேவினர் எனச் சுருங்கச் சொல்லினுர்.

நாட் பொருத்தம் கூறப்போந்த முதற் கட்டுரையின் கண்ணும் (மலர் 13. இதழ்·1) பண்டைப் புலவர் சோதிடம் அறிந்தவர் எனக் கூறப்பட்டுள்ளதையும் காண்க.

மேற்கோள் :

எண்ணப்பட்ட அகரமுதலைந்தும்
வல்லூ ருந்தை வலியன் குருகே
மெல்லியல் மயிலென விளம்பிய வியற்கையிற்
புள்ளெனக் கூறும் புலவரும் உளரே. —பரணர்.

இப்புட்களின் (பஞ்ச பட்சிகளின்) நிலை இஞ்ஞான்றுள்ள இளம் புலவர் பலர் அறியா ராகையான் அவர்தம் நலங்கருதி ஈண்டைக்கு இன்றியமையாதவைகளை எடுத்தியம்புவாம்.

தானப் பொருத்தத்தின் கண் எல்லா எழுத்துக்களையும் அ. இ, உ, எ, ஒ, என்னும் ஐந்து குற்றெழுத்துக்களுடன் அடக்கிப் பொருத்தம் அமைத்தவாறு போல ஈண்டும் கொண்டு புட்பொருத்தம் அமைத்தல் வேண்டும்.

**பெயர்ப் பட்சி**

| அ | இ | உ | எ | ஒ |
|---|---|---|---|---|
| வல்லூறு | ஆந்தை | வலியன் | கோழி | மயில் |

ஒருவரது பெயரின் முன்னெழுத்துக்கு உரிய பட்சியே அவர்தம் பெயர்ப் பட்சியாம்.

உயிர் மெய்களுக்கு அம் மெய்களின் மேலேறியிருக்கும் உயிர்களைக்கொண்டு பட்சிகளைக் காண்க. (ஐ இகரஇனம். ஔ. உகரஇனம்)

உதாரணம் :

(1) அழகன், ஆறுமுகன், கண்ணன், கார்த்திகன், சங்கரன், சாரங்கன் என்னும் பெயர்கட்கு உரியபட்சி வல்லூறு.

(2) இரணியன், ஈசன், ஐயப்பன், கிருட்டினன், கீரன், சீலன் என்னும் பெயர்கட்கு உரியபட்சி ஆந்தை.

(3) உலகநாதன், ஊரன், ஔவை, துரை, தூயோன், குமணன்என்னும் பெயர்கட்கு உரியபட்சி வலியன்.

(4) எழிலன், ஏகன், செந்திலான், சேரன், தெண்டாயுதன், பெரியண்ணன் என்னும் பெயர்கட்கு உரியபட்சி கோழி.

(5) ஒளியன், ஓவியன், தொல்காப்பியன் கொடையன், கோவிந்தன், பொன்னன் என்னும் பெயர்கட்கு உரியபட்சி மயில்.

ஈண்டுக்காட்டிய உதாரணங்களைக் கொண்டு ஏனைய பெயர்கட்கும் முன்னெழுத்தைக் கண்டு பட்சியை அறிந்து கொள்க.

இனி இப்புட்களின் பகை, உறவு என்னும் இரு தன்மை களைப் பற்றிக் கூறுவாம்.

ஈண்டு இயம்பிய ஐம்புட்களின் பகை, உறவு என்னும் இரு தன்மைகளும் முப்பிரிவுகளாக உள்ளன.

வருமாறு:— நிறைமதிக்கு ஒருவகை. இருள்மதிக்கு ஒரு வகை, ஆயுள்வரை ஒரு வகையாம்.

இங்ஙனம் உள்ள முப்பிரிவுகளில் (வகைகளில்) ஈண்டு எடுத்தாளவேண்டியது ஆயுள்வரை உள்ள வகையையே யாம். ஆகையான் ஆயுள்வரை உள்ள உறவு, பகை என்பவைகளைப் பற்றிக் கூறுவாம்.

### (ஆயுள்வரை பகை, உறவுப்புட்கள்)

மயிற்பகை வல்லூ ருந்தை கோழிக்கு மவையேயாகும்
செயிற்பகை வலியற் காந்தை யாந்தைக்கு வலியன்தீதாம்
இயற்றிய வலியனல்லா தெல்லாம் வல்லூறினுக்கே
உயிற்பகை யல்லான் மற்றிங் கொழிந்தவை யுறவாமன்றே.

—சூடாமணி உள்ள முடையான்.

(இ - பொ) மயிலுக்கு வல்லூறும், ஆந்தையும் பகையாம்; கோழிக்கும் அப்புட்களே (வல்லூறும், ஆந்தையும்) பகையாம். வலியனுக்கு ஆந்தை பகை. ஆந்தைக்கு வலியன் பகை. வல்லூறுக்கு வலியனல்லாத பிறபுட்கள் (ஆந்தை, கோழி, மயில் என்னும் மூன்று புட்கள்) பகையாம். மற்றப்புட்கள் உறவாகும் என்பதாம்.

உயிர்ப்பகை என்பதன்கண் உள்ள இடையின ரகர ஒற்று செய்யுட்கண் எதுகைத்தொடை நோக்கி வல்லொற்ருய் நின்றது.

மயிலுக்கு வல்லூறு ஆந்தை பகையென்றதனுன் வல்லூறுக்கும் மயில் பகை, ஆந்தைக்கும் மயில் பகை எனக்கொள்க.

இங்ஙனமே ஏனையபுட்களுக்கும் கொண்டு உறவுப் பட்சியைக் காண்க.

நிறைமதி, இருள்மதி (வளர்பிறை, தேய்பிறை) என்னும் இருவகைகளுக்குக் கூறிய முறையை ஈண்டுக்கொள்ளல் ஆகாதோ? வெனின், ஆகாதாம். என்னை? யெனின், இயம்புவாம்.

நிறைமதி, இருள்மதி என்னும் இரு பிரிவுகளுக்குரிய பகை, உறவு என்னும் இரு தன்மைகள் திங்கள் இருமுறைமாற்றம் அடையும் நிலையைப் பெற்றிருத்தலினும் (நிறைமதியின் ஞான்று ஒரு புள்ளுக்கு உறவாய் அமைந்தபுள் இருள்மதியின் ஞான்று பகையாயும், இருள்மதியின் ஞான்று ஒரு புள்ளுக்குப் பகையாய் அமைந்தபுள் நிறைமதியின் ஞான்று உறவாயும் இருத்தலினும்) எழுத்துக்களுக்குரிய புட்களும், நிறைமதிக்கு ஒருவிதமாகவும், மாற்றமடைந்திருத்தலினும் இம்முறை ஈண்டுக் கொள்ளத்தக்க தன்றும் எனத்தெளிக.

ஒருவர்மீது பாடும் பாமாலையான் அவர் (பாட்டுடைத் தலைவர்) பல்லாண்டுகள் பல நலங்களும் பெற்றுச் சிறந்து வாழ வேண்டுமாகையான் அவர் பெயர்ப்புள்ளுக்கு ஆயுள்வரை உறவாக விளங்கும் (சென்ம உறவு) புள்ளுக்குரிய எழுத்தையே பாமாலை முதற்சீரின் முன்னெழுத்தாக அமைத்தல் கடமை யாமென அறிக.

தானப் பொருத்தத்தின்கண் ஆய்ந்தெடுத்த எழுத்துக்களி லிருந்தே உறவுப் பட்சிக்குரிய எழுத்தை எடுத்தாளவேண்டும்.

பாட்டுடைத் தலைவன் பெயர்ப்பட்சிக்குப் (புள்ளுக்கு) பகைப் பட்சிக்குரிய எழுத்து பாமாலையின் முதன் மொழியின் முன்னெழுத்தாக நிற்கின் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமையே உண்டாகும். ஆகையான் பகைப்பட்சிக்குரிய எழுத்தை முதன் மொழியின் முன்வைத்தல் ஆகாதென அறிக.

உறவுப் பட்சிக்குரிய எழுத்தை முன்வைக்க இயலாநிலை ஏற்படின் பாட்டுத் தலைவன் பெயர்ப்பட்சிக்குரிய எழுத்துக்களுள் ஒன்றை முதன் மொழியின் முன்னெழுத்தாக அமைத்திடுக. இஃதும் முன்னர்க் கூறிய பொருத்தங்கட்கியைந் திருத்தல் வேண்டும்.

உதாரணம்:

சுப்பிரமணியன் என்னும் பெயரின் முன் உள்ள 'சு' என்னும் உயிர்மெய்யெழுத்தில் உகர உயிர் இருத்தலான் உகரத்திற்குரிய வலியனே (காகம்) சுப்பிரமணியன் என்னும் பெயராளருக்குப் பெயர்ப்பட்சியாம்.

சுப்பிரமணியன் என்னும் பெயராளருக்குத் தானப் பொருத்தத்தின்கண் ஆய்ந்து முதன்மொழியின் முன்வைக்கத் தக்கவையெனத் தேர்ந்தெடுத்த எழுத்துக்கள் வருமாறு:—

சொ. சோ. மெ. மே. என்னும் நான்குமாம்

இந்நான்கெழுத்துகட்குரிய பட்சிகள் வருமாறு:

சொ. சோ — மயில்

மெ. மே — கோழி

சுப்பிரமணியன் என்னும் பெயராளருக்கு உரிய பட்சியாய வலியனுக்கு மயில், கோழி என்னும் இருபட்சிகளும் உறவு ஆகையான் இப்புட்களுக்குரிய எழுத்துக்கள் முதன்மொழியின் முன்னெழுத்தாக நிற்கத் தகுதி உடையனவாம். இவ்வெழுத்துக்களுள் ஒன்றை முதன் மொழியின் முன்னெழுத்தாய் அமைத்திடுக.

வலியனுக்குப் பகைப் பட்சிக்குரிய எழுத்துக்களைத் தானப் பொருத்தத்தின் கண்ணே (மூப்பு, மரண தானமாய் இருந்தமை பற்றி) நீக்கப் பட்டதால் ஈண்டு அவைகளை எடுத்துக்காட்டவில்லை என்பதோர்க.

இங்ஙனமே ஏனைய எல்லாப் பெயர்கட்கும் புட்பொருத்தம் கண்டு கொள்க.

இனி மங்கலச் சொற்பொருத்தம் கூறுவாம்

---

(தொடரும்)

## கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

| தொடர் எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியரின் பெயர் |
|---|---|---|
| 9460 to 66 | திருமாகறல் திருப்பதிகம் | தருமையாதீனம். |
| 9467 to 73 | திருக்குரங்கணில் முட்டம் திருப்பதிகம் | ஷை |
| 9474 to 77 | திருக்காளத்தித் திருப்பதிகங்கள் | ஷை |
| 9478 & 79 | வித்துவான் தேர்வு வினாவிடை, எண் 1 (தொல் காப்பியம், எழுத்ததிகாரம் இளம் பூரணம்) | மதுரகவி. திருமுறைச்செம்மல், வித்துவான் தா. .ம வெள்ளைவாரணம், தமிழ் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள் |
| 9480 & 81 | மணிமேகலையின் காலம் | சோ. ந. கந்தசாமி எம் .ஏ. தொல்காப்பியர் |
| 9482 & 83 | Conquest of Anger | Swami Sivananda [நூலகம். |
| 9484 & 85 | ஞானு நுட்டான விதியும், ஞான பூஜாவிதியும் | திருவாவடுதுறை ஆதீனம். |
| 9486 to 88 | திருமந்திரமாநாட்டு மலர் | ஷை |
| 9489 to 93 | அரசவனத்து அறநிலையம் | ஷை |
| 9494 to 9501 | சிவஞான தீபம். (குறிப்புரையுடன்) | ஷை |
| 9502 to 21 | தாயுமானசுவாமிகள் அருளிச் செய்த மௌன குரு வணக்கம் (தெளிவுரையுடன்) | திரிசிரபுரம் மௌனகுரு வாரவழிபாட்டுக் கழகம் தொடக்கவிழா வெளியீடு. 9-3-1962 |
| 9522 to 45 | திருவடித்திருவிருத்தம் (விளக்கவுரையுடன்) | ஆசிரியர், வித்துவான், வை. சுந்தரேசவாண்டை [யார் |
| 9546 | திருமுண்டீச்சரத் தலவரலாறு | தேவஸ்தான வெளியீடு. |

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

# ‘திருமுறை வெளியீடுகள்’

| | | ரு. | ந. பை |
|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை ... | 0 | 06 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 3 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ... | 3 | 00 |
| 4* | திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்) (புதிய பதிப்பு) ... | 2 | 75 |
| 5* | திருநாவுக்கரசர் தேவாரம் .. .. ... | 2 | 00 |
| 6* | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) .. ... | 1 | 30 |
| 7* | திருவாசகம் ,, ... | 0 | 56 |
| 8* | திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு) ... | 2 | 90 |
| 9 | ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்) ... | 0 | 56 |
| 10* | திருமந்திரம் .. (புதிய பதிப்பு) ... | 2 | 25 |
| 11 | பதினோராந்திருமுறை .. (அச்சில்) | | |
| 12 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ... | 0 | 25 |
| 13 | திருக்கைலாயஞானவுலா - உரையுடன் ... | 0 | 50 |
| 14 | பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்) | | |
| 15* | அகத்தியர் தேவாரத்திரட்டு ... | 0 | 37 |
| 16 | திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்) ... | 3 | 00 |
| 17 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்) ... | 1 | 75 |
| 18 | கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் .. ... | 2 | 75 |
| 19 | .. யுத்த தேவகாண்டம் .. ... | 2 | 00 |
| 20 | .. தக்ஷகாண்டம் .. ... | 1 | 50 |
| 21 | கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன் ... | 0 | 25 |
| 22 | கந்தரனுபூதி ... | 0 | 13 |
| 23 | கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் ... | 0 | 37 |
| 24 | கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும் ... | 0 | 06 |
| 25 | கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும் ... | 0 | 37 |
| 26 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... | 0 | 50 |
| 27 | சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... | 0 | 06 |
| 28 | திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ... | 1 | 50 |
| 29 | திருக்குறள் – பொருட்பால் .. ... | 2 | 50 |
| 30 | திருக்குறள் – காமத்துப்பால் .. ... | 1 | 00 |
| | டி 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும் ... | 4 | 00 |
| 31 | திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ... | 0 | 75 |
| 32 | திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ... | 0 | 13 |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No 1485 57

Regd No. M 5574 குமரகுருபரன்.

| | | | |
|---|---|---|---|
| 33 | முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) | ... | 0 75 |
| 34 | திருவுசாத்தானக் கல்வெழுத்துக்கள் | ... | 0 37 |
| 35 | திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை- மதுரை மீனுட்சியம்மை குறம் | ... | 2 75 |
| 36 | திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் | ... | 1 25 |
| 37 | சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை- தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை | ... | 1 00 |
| 38 | பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை | ... | 1 00 |
| 39 | சிதம்பரச் செய்யுட்கோவை | ... | 0 75 |
| 40 | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | ... | 0 50 |
| 41 | பெரியபுராணம் – உரைநடை | ... | 2 00 |
| 42 | திருவிளையாடற் புராணம் – உரைநடை | ... | 2 25 |
| 43 | குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங் களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும் | ... | 0 50 |
| 44 | திருக்கயிலைத் திருமுறை | ... | 0 37 |
| 45 | திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் | ... | 0 19 |
| 46 | செந்திலாண்டவன் மகிமை | ... | 0 13 |
| 47 | திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு | ... | 1 37 |
| 48 | டிெ டிெ பொருட்பால் 2-ம் பதிப்பு | ... | 2 75 |
| 49 | டிெ டிெ காமத்துப்பால் டிெ | ... | 1 20 |
| 50 | அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன் | ... | 0 50 |
| 51 | மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்) | ... | 0 50 |
| 52 | கந்தரனுபூதி-தெளிவுரையுடன் | ... | 0 35 |
| 53 | திருவாரூர்-திருப்பனுவல்கள் | ... | 0 10 |
| 54 | திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி | ... | 0 10 |
| 55 | பழமொழித்திருமுறை | ... | 0 25 |
| 56 | கோளறு திருப்பதிகம் | ... | 0 03 |

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
*"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோயில்தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.*

குறிப்பு:- ● இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ [illegible]ாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '62